பக்கங்கள்:13 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 08 வியாழக்கிழமை 21.04.2022 கதிர் 167

இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் விதத்தில் 21 ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று சபாநாயகரிடம் கையளிக்கும் என நேற்றைய எனது பத்தியில்

2

# ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் பிரேரணை இன்று



## எதிரணி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்

கொழும்பு, ஏப்ரல் 21

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அடியோடு ஒழிக்கும் அரசமைப்புத் திருத்தத்தை உள்ளடக்கிய பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று காலை ஒன்பதரை மணிக்கு சபாநாயகரிடம் கையளிக்கும் எனத் தெரிகிறது.

12

## யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 50 பவுண் தங்க நகைகள் திருட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் இருந்து 50 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன எனக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் பின் திசையில் உள்ள வீதியில் வசிக்கும் - தொழில்நுட்பக்

2

## 20 ஆவது திருத்தத்தை நீக்கும் அரசின் பிரேரணை திங்களன்று

### பிரதமர் அமைச்சரவையில் சமர்ப்பிப்பார்



கொழும்பு, ஏப்ரல் 21

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு கட்டு மட்டில்லாத அதிகாரங்களை வழங்கும் சரத்துக்களை அரசமைப்பில் இருந்து நீக்கி, மீண்டும் முன்னைய19ஆவது திருத்தத்தில் இருந்த ஏற்பாடுகளை திரும்பக் கொண்டு வருவதற்கான அரசமைப்புத் திருத்தம் யோசனை ஒன்றை வரும் திங்கட்கிழமை கூடும் புதிய அமைச்சரவையின் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகின்றது.

2

## 81 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப் 21

மன்னார் கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 81 கிலோ கஞ்சாவை கடற்படையினர் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவின்

2

## நாடு ராஜபக்ஷக்களின் குடும்பச் சொத்தல்ல; ஆட்சியை விட்டு உடனே வெளியேறுங்கள்!

### அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று சபையில் ஆவேசம்

"இலங்கை நாடு என்பது பிரதமர், ஜனாதிபதி அல்லது ராஜபக்ஷக்களின் தனிப்பட்ட சொத்தல்ல. எனவே, குடும்பம் ஒன்றிடம் ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தவிட்டு, அமைதியாக தூங்கிக்கொண்டிருக்க முடியாது. மக்கள் அச்சமடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வீதியில் இறங்கி போராடுகின்றனர். இனியும் எதற்காக பேசிக்கொண்டிருக்க வேண்டும்? முழு அரசாங்கமும் ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும்."

13

## தமிழக மீனவர்கள் மீது நடுக்கடலில் தாக்குதல்; பொருள்கள் சூறையாடல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப். 21

தமிழ்நாடு நாகை மாவட்டம் வேதாரண்யம் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் மீன் பிடிக்கக் கடலுக்குப் புறப்பட்ட மீனவர்கள் மீது நேற்று அதிகாலை கடலில் வைத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு , அவர்களின் பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என முறையிடப்பட்டுள்ளது.

வைபர் படகுகளில் கோடிக்கரைக்குத் தென் கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது நள்ளிரவில் வந்த இலங்கை மீனவர்கள், மூன்று படகுகளில் இருந்த மீனவர்களை

2

## பொய்யுரைக்கின்றீர் என பரஸ்பரம் சபாநாயகர் - சஜித் குற்றச்சாட்டு



அனைத்துக் கட்சி தலைவர்களும் ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதி தாம் பதவி விலகத் தயார் எனத் தெரிவித்தார் என்று கூறப்பட்ட விடயம் நேற்று நாடாளுமன்றத்தில்பெரும்சர்ச்சையைக் கிளப்பியது.

இது விடயத்தில்

13

# நாணய நிதியம் வழங்கும் உதவிகள் ராஜபக்ஷக்களினால் சூறையாடப்படுவதைத் தடுக்க உரிய நிபந்தனை அவசியம்

## நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கோரினார் சுமந்திரன்



கொழும்பு ,ஏப்ரல் 21

"நாட்டின் அப்பாவி மக்களின் மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் அவசர உதவித் திட்டங்கள் விரைந்து கிட்ட வேண்டும். அவை அவசியம். அத்தியாவசியம். ஆனால் அவற்றையும் ராஜபக்ஷக்கள் சூறையாடி விடும் ஆபத்து உள்ளது. ஆகவே அந்த உதவித் திட்டங்கள் நேரடியாக மக்களுக்குக் கிடைப்பதையும், இடையில் ராஜபக்ஷக்கள் ஏப்பம் விடாமல் தடுப்பதையும் உறுதிப்படுத்தும் நிபந்தனைகளை விதித்து அதனை சர்வதேச நாணய நிதியம் முன்னெடுக்க வேண்டும்."

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கோரினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுபவர்களை வன்முறையை நாட வேண்டாம் என்று ஜனாதிபதி தமது டுவிட்டர் செய்தி மூலம் கோரியிருக்கிறார். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள்

12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்டு இருந்தேன். ஆனால் அது நேற்று நடக்கவில்லை. இன்று காலை 9.30 மணிக்கு சுப நேரம் என்பதால் அச்சமயத்தில்அதைச்சமர்ப்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் 20ஆவது திருத்தத்தை நீக்கி, 19 ஆவது திருத்தத்தின் சரத்துக்களை மீளக் கொண்டு வருவதற்கான 21 ஆவது திருத்தத்திற்கான தமது யோசனைத் திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றார். இந்த இரண்டுவிடயங்கள் சம்பந்தமான விளக்கமான செய்திகள் தனித்தனியாக முற்பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

சரி. இரண்டு தரப்புகளுமே – எதிரணியும் பிரதமரும் – தாங்கள் சமர்ப்பிக்கும் பிரேரணையை 21 ஆவது திருத்தம் என்று குறிப்பிட்டு முன்வைத்தால், எது உண்மையில் 21 ஆவது திருத்தமாக நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும்? இது ஒரு நியாயமான கேள்வி.

ஆனால் ஆரம்பத்தில் இந்த இரண்டுமே – அதாவது பிரதமரும் எதிரணியும் இப்போது சமர்ப்பிக்க கூடிய பிரேரணைகள் 21 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்று குறிப்பிடப்படவே மாட்டா என்பது தான் முக்கியம்.

ஏனெனில் இதேபோல விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி. முன்னர் தனி நபர் பிரேரணையாகச் சமர்ப்பித்த ஓர் அரசமைப்பு திருத்தத்துக்கான நகல் வடிவப் பிரேரணை 21 ஆவது திருத்தம் என்ற பெயரில் பதிவில் காத்துக் கிடக்கின்றது. இப்போது இரு தரப்பினராலும் சமர்ப்பிக்கப்படப் போகின்ற பிரேரணை நகல்கள் அப்படியே உள்வாங்கப்படும். அவை சபையின் விவாதத்திற்காக வர்த்தமானியில் அறிவிக்கப்படும்போதுதான் அவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு – முதலில் வருவதற்கு – 21 ஆவது திருத்தம் என்று பெயர் கொடுக்கப்படும் எனத் தெரிகிறது.

இதற்கிடையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் மாலையில் பிரதமரை அலரிமாளிகைக்குச் சென்று சந்தித்தார். அதன் பின்னர் அவர்கள் இருவரும் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர் என்றும் கூறப்படுகின்றது.

அதன் பின்னர்தான் ஜனாதிபதி பதவி விலகுவது பற்றிய பேச்சு பரபரப்பாக பரவியது. நானும் கூட நேற்று என்பது பத்தியில் அதுபற்றித் தொட்டுக்காட்டி இருந்தேன். இனிமேல்தான் அதுகுறித்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்என்று கோடியும் காட்டியிருந்தேன்.

அதன் பின்னர்தான் ஜனாதிபதி பதவி விலகத் தயாராக இருக்கின்றார் என்ற பேச்சு நேற்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வெளி வந்தது என்பதையும் கவனிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் நெருப்பில்லாமல் புகை வரவில்லை என்பதுதான் உறுதி. நாடாளுமன்றத்தில் நேற்று அரசல்புரசலாக பேசப்பட்ட இந்த விடயம் பெரும்பாலும் எந்நேரமும் நடக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இதற்கிடையில் தாம் சமர்ப்பிக்கவிருக்கும் அரசமைப்பு திருத்த முன்யோசனை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணி வரை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை அழைத்து சட்ட ஆலோசனை நடத்தினார். இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பிரதமரின் இணைப்புச் செயலாளர் காசிலிங்கம் கீதநாத் ஆகியோரும் பங்குபற்றினர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை முழுமையாக ஒழிப்பதுதான் இப்போதைய நெருக்கடிக்கு ஒரே வழி என்று ஆலோசனை கூறினார் சுமந்திரன்.

'முழுமையாக அந்த ஆட்சி முறைமையை ஒழிக்க எதிரணிகள் விரும்புகின்றன. ஆனால் நீங்கள் 20 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மாத்திரம் விலக்க விரும்புகிறீர்கள்.

'யார் எதைச் செய்தாலும் இரண்டு விடயங்கள் அவசியம். ஒன்று – சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசமைப்புத் திருத்தத்துக்கு மக்களின் அனுமதி பெறல். மற்றது – எந்தத் திருத்தத்துக்கும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அவசியம். இன்றைய நிலையில் மக்கள் அனுமதி பெறுவது மிகச் சுலபமாக இருக்கும். இரண்டாவது விடயம்தான் சிக்கலுக்குரியது. நீங்களும் (அரசும்) எதிரணியும் இணைந்தால்தான் அந்த இரண்டாவது விடயத்தை எட்ட முடியும். நான் இரண்டு தரப்புகளுக்கும் – அரசுத் தரப்பு எதிரணி இரண்டுக்கும் – இந்த ஒரு ஆலோசனையை தான் தருகிறேன். யோசித்து, ஆலோசித்து, முடிவெடுப்பது உங்கள் இரு தரப்புகளையும் பொறுத்தது' – என்று விளக்கினார் சுமந்திரன்.

'எதிரணியின் பிரேரணை நாளை (இன்று) சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பிரதி உங்களுக்குக் கிடைக்கும். வரும் திங்கட்கிழமை உங்களின் அரசமைப்பு திருத்தத்திற்கான பரிந்துரை யோசனை அமைச்சரவையில் எடுக்கப்படும்போது எதிரணியின் பிரேரணையையும் பரிசீலினை செய்யுங்கள். இரண்டிலும் இருந்து சாதகமானவற்றை சேர்த்து ஒரு திட்டத்தை – இரு தரப்புகளுக்கும் இணக்கமான ஏற்பாட்டை – செய்ய முடியுமா என்று பாருங்கள்' – என்றும் சுமந்திரன் ஆலோசனை தெரிவித்தார்.

இதேசமயம், ஜனாதிபதி பதவியில் மாற்றம் வந்தால் ஏற்படக்கூடிய மாற்று நடவடிக்கைகள் குறித்தும் பேசப்பட்டதாக தெரிகிறது. எல்லா தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து ஓர் இணக்கமான அரசைக் கொண்டு நடத்தக் கூடிய முயற்சிகள் குறித்தும் பேசப்பட்டதாக அறிய வந்தது. சட்டரீதியாக தம்முடைய ஆலோசனைகளை சுமந்திரன் வழங்கினார் என்றும் கூறப்பட்டது.

'ஆட்சிக்கு வந்த பின்னர் நீங்கள் (பிரதமர்) அரசியல் விடயங்களையும் அவர் (ஜனாதிபதி) நிர்வாக விடயங்களையும் கவனித்திருந்தால் நிலைமை மேம்பட்டு இருக்கும்' என்ற சாரப்பட சுமந்திரன் கருத்து கூறினார் எனத் தெரிகிறது.

அப்போது குறுக்கிட்ட பிரதமரின் செயலாளர் "நீங்கள் (சுமந்திரன்) செயற்படுவதற்கு சம்பந்தன் அனுமதித்திருப்பது போல அனுமதித்து இருக்கலாம் என்பதையா குறிப்பிடுகிறீர்கள்?'' – என்று கேட்க எல்லோரும் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

இதற்கிடையில் நேற்று வடக்கில் யாழ்ப்பாணம் கடுமையான ஹர்த்தால் போல் காட்சியளித்தது. ஆனால் கிளிநொச்சியில் நிலைமை வழமையாக இருந்தது. கூட்டமைப்பின் யாழ். – கிளிநொச்சி அரசியல் பிரதிநிதிகளின் மனநிலையை பிரதிபலிப்பதாக அது இருந்தது என்று ஓர் அன்பர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மே தினம் நெருங்குகின்றது. இ.தொ.காவின் மேதின நிகழ்வில் பங்கு பெறுவதற்காக இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை இலங்கை வருகிறார் என ஒரு தகவல் தெரிவித்தது. அவர் 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நிற்பார் எனத் தெரிகிறது தமிழகத்தில் இப்போது பரபரப்பை ஏற்படுத்தும் முக்கிய பேச்சாளர் – அரசியல் தலைவர் – அண்ணாமலை. அவரது இலங்கை விஜயம் பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

---

## தமிழக மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாள், கட்டைகளால் தாக்கி , படகுகளில் இருந்த ஜி.பி.எஸ் கருவிகள், பட்டரிகள், டோர்ச் லைட்டுகள், டீசல் என்பனவற்றுடன் பிடித்த மீன்களையும் அள்ளிச் சென்றனர் என முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் நேற்று அதிகாலை ஆறுகாட்டுத்துறை கடற்கரைக்குச் சென்று சம்பவங்களை மீனவ பஞ்சாயத்தார்களிடம் தெரிவித்தனர்.

கடலில் இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களை தாக்கியதான சம்பவம் மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் இந்திய மீனவர்கள் இயந்திரப் படகில் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்ட 61 நாள் காலம் இது. அதனால் இந்திய மீனவர்களின் இயந்திரப் படகுகள் எவையும் கடலில் இல்லை. ஆக வைபர் படகுகளில் தொழில் செய்யும் மீனவர்களே இந்தியத் தரப்பில் கடலில் இருப்பர். அதை வசமாகப் பயன்படுத்தி இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது.

---

## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

19ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் நாடாளுமன்றத்துக்கும், பிரதமருக்கும், அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு கிட்டிய பல அதிகாரங்கள், மீண்டும் பிடுங்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுவதற்கு 20ஆவது திருத்தம் வழிசெய்தது.

ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் எதிராக நாட்டில் மக்கள் எழுச்சி கிளர்ந்துள்ள இச்சூழலில் அதனைச் சமாளிப்பதற்காக, மீண்டும் 19ஆவது திருத்தச் சரத்துகளைக் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதன் முதல் நகர்வாக தமது யோசனை திட்டத்தை பிரதமர் திங்களன்று அமைச்சரவையில் சமர்ப்பிப்பார் என்று உறுதிப்படுத்திய தகவல்கள் தெரிவித்தன.

## 81 கிலோ கஞ்சா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்நாட்டில் இருந்து கடத்தி வரப்பட்டு, எடுத்துச் செல்லப்படும் நோக்கில் கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சமயமே நேற்றுக் காலை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 2 கோடி ரூபா எனத் தெரிவித்துள்ள கடற்படையினர் இது தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

---

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்லூரியின் பெண் விரிவுரையாளர் வீட்டிலேயே இந்தத் திருட்டு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் மாலை 4.30 இற்கு வெளியில் சென்று, இரவு 8 மணியளவில் வீட்டிற்குத் திரும்பிய சமயமே திருட்டு இடம் பெற்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மரண அறிவித்தல்



மலர்வு
26
10
1938

உதிர்வு
19
04
2022

### அமரர் நவமணி பாக்கியநாதன்

முன்னாள் பிரதம நூலகர், யாழ் மருத்துவபீடம், இலங்கை

திருமதி நவமணி பாக்கியநாதன் 19.04.2022 அன்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி (யாழ்) மற்றும் சிட்னி (ஆஸ்திரேலியா)வை வதிப்பிடமாகக் கொண்டவராவார். இவர் காலஞ்சென்ற அமரர்.கலாநிதி வே.இ.பாக்கியநாதன் (முன்னாள் உப அதிபர் யாழ் தொழில்நுட்பக்கல்லூரி, முன்னாள் பிரதம நூலகர், யாழ் பொதுசன நூல் நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும், பாக்கியராஜா, மோகனராஜா, மாலினி, நேசராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், யூடி, கிறிஷ்ணகலா, ராகுலன், சசீந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்வின், மிதூன், ரூபிகா, தரன், நிஷா, ஷயன், காவியள், தரணிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னார் காலஞ்செள்றவர்களான தரணியகல க.மு.தம்பு. செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி, மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், திருச்செல்வம் (லண்டன்), காலஞ்சென்ற பன்னீர்ச்செல்வம் (பிரான்ஸ்), அருட்செல்வம் (கனடா), காலஞ்சென்ற தம்புச்செல்வம், காலஞ்சென்ற கதிர்காமச்செல்வம் (லண்டன்), செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகம், காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற ராசாத்தி, சரோஜினி (பிரான்ஸ்), சிவகாமசுந்தரி (கனடா), ரஞ்சிதகுமாரி (லண்டன்), விவேகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2022 அன்று பிற்பகல் 1 – 4 மணிக்கு **Castlebrook Memorial Park, Rouse Hill** இல் இடம்பெற்று பின்னர் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**+61 497 674 944**

**தகவல்**
**குடும்பத்தினர்**





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 076 306 8091

Whatsapp:- 071 7736 4308


No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL

### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நெருக்கடி நீடிக்கும்

**இலங்கை எதிர்கொள்ளப் போகும் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு உள்ள ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவது மட்டுமே என்பது கடந்த ஆண்டு முற்பகுதியிலேயே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டது.**

**முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் பிரமுகர்களும் மற்றும் பொருளாதார நிபுணர்களும் இது தொடர்பில் அபாயச் சங்கு ஊதிய போது நாட்டின் தலைவர் அந்த ஆலோசனைகளை – எச்சரிக்கைகளை – கிள்ளுக் கீரையாகப் புறக்கணித்து மெத்தனத்துடன் நடந்து கொண்டார்.**

**அப்படித் தாம் பொறுப்பின்றி நடந்து கொண்டமை தவறுதான் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது நாட்டுக்கு ஆற்றிய உரையில் – காலம் கடந்து – ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளாகியிருக்கின்றார்.**

**நாட்டின் புத்திஜீவிகளின் அமைப்பு என்ற பெயரில் 'வியத்மக' மற்றும் 'எளிய' என்ற கட்டமைப்புகளை உருவாக்கி, அவற்றின் மூலமே தாம் ஜனாதிபதியாவதற்கான தந்திரோபாய நகர்த்தல்களை அவர் முன்னெடுத்தார்.**

**நாட்டின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றுவதற்கு பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைப் பயன்படுத்தும் கீழ்தரமான நடைமுறைக்கு அங்கீகாரம் அளித்து, அதனை ஏற்று, அதன் வழி தமது பிரசார உத்திகளை வகுத்தவைதான் இந்தப் புத்திஜீவிகளின்(?) அமைப்புகள்.**

**அத்தகைய கேடுகெட்ட புத்திஜீவிகளைத் தமது ஆலோசகர்களாக வைத்திருந்தமையால்தான் இப்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுங்கள் என்று நேரத்துடன் வழங்கப்பட்ட சரியான ஆலோசனையை ஏற்க முடியாத நிலைமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டதோ என்னவோ...!**

**ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சிக் கதிரை ஆட்டம் காணும் சமயத்தில் – இப்போது – அந்த 'வியத்மக' புத்திஜீவிகளில் பலரையும் காணோம் என்று கூறப்படுகின்றது. நாட்டின் தலைவருக்குக் கயிறு கொடுத்து, அவருடன் நாட்டையும் நடு வீதியில் விட்டு விட்டு, அவர்கள் எல்லோரும் கம்பி நீட்டிவிட்டார்கள் போலும்.**

**இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையில் அந்தப் பதவியில் அமர்ந்த ஏழாவது பிரமுகர் கோட்டாபய ராஜபக்ஷ.**

**மற்றைய ஆறு பேருக்கும் இல்லாத ஒரு சிறப்பு அவருக்கு இருந்தது. நாட்டில் பெரும்பான்மையான அறிவுஜீவிகள் ஒன்று திரண்டு, ஆதரித்து, பிரசாரம் செய்து, அவர்கள் மூலம்ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டவர் அவர்தான் என்பதே அச்சிறப்பு.**

**அதேசமயம், அத்துணை புத்திஜீவிகளைச் சூழ வைத்திருந்தும் முட்டாள்தனமான முடிவுகளை எடுத்து, நாட்டு நிர்வாகத்தைப் போட்டழித்த அரசுத் தலைவர் என்ற சாதனைப் பெயரையும் அவரே சுமக்கப் போகின்றார்.**

**இந்நிலைமை ஏற்பட்டதற்கு அவருக்கு ஆலோசனை வழங்க ஒன்று திரண்டிருந்த புத்திஜீவிகளின் போக்குக் காரணமா? அல்லது யாரின் ஆலோசனையையும் செவிமடுக்காமல் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளும் அவரின் போக்குக் காரணமா என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.**

**எது, எப்படியோ, சர்வதேச நாணய நிதியத்திடம் சரண் புகும் திட்டம் தாமதமானமையால் நிலைமை இன்னும் மோசமாகப் போகின்றது என்பது திண்ணம்.**

**இலங்கையுடனான உதவித் திட்டப் பேச்சுகள் இப்போது தான் ஆரம்பக்கட்டத்தில் இருக்கின்றன என்று நாணய நிதியமே தெரிவித்து விட்டது. அதனிடமிருந்து உதவிகள் கிடைக்க மேலும் பல மாதங்கள் பிடிக்கலாம்.**

**அதுவரை நின்று பிடிப்பது இலங்கைக்கும் இலங்கை மக்களும் மிக மிக மோசமான இக்கட்டாக இருக்கப் போகின்றது. எப்படிச் சமாளிக்கப்போகின்றது நமது நாடு...?**

## எரிபொருள் மற்றும் மின்சாரம் விநியோக கட்டமைப்பை சீராக்கவே விலையேற்றம்

### காஞ்சன விளக்கம்



எரிபொருள் விலையை குறைப்பதற்கும், தடையின்றிய வகையில் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குமான யோசனையை எதிர்த் தரப்பினர் தாராளமாக முன்வைக்கலாம்.

எரிபொருள் விநியோக கட்டமைப் பினையும், மின்விநியோக கட்டமைப்பையும் சீராக முன்னெடுப்பதற்காகவே எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும், லங்கா ஐ.ஓ.சி . நிறுவனமும் புதிய எரிபொருள் விலை சூத்திரத்திற்கமைய செயற்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என மின்சாரத் துறை மற்றும் வலுசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேயசேகர சபையில் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை பதவியேற்று 24 மணித்தியாலத்திற்குள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதன் பின்னணி தொடர்பாக எதிர்த்தரப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளதை தொடர்ந்து பொது மக்கள் பாதிக்கப்பட்டு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ள நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்காத காரணத்தால் கூட்டுத்தாபனம் நாளாந்தம் 160 கோடி ரூபா நட்டத்தை எதிர்க்கொள்ள நேரிடும்.

உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றம், டொலர் நெருக்கடி ஆகிய அடிப்படை காரணிகளால் தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.எரிபொருள் மற்றும் மின்சார சேவை கட்டமைப்பை சீரான முறையில் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்பதற்காகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிட்டது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எரிபொருளின் விலையை அதிகரிப்பதால் பொது மக்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள் என்பதை எம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

எரிபொருள் சேவை மற்றும் அதனுடன் ஒன்றிணைந்த தொழிற்துறையினருக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும், லங்கா ஐ.ஓ.சி.நிறுவனமும் ஒன்றிணைந்து எதிர்வரும் காலங்களில் எரிபொருள் சூத்திரத்திற்கமைய செயற்பட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைப்பு, எரிபொருளை தடையின்றி விநியோகித்தல் தொடர்பாக எதிர்த்தரப்பினர் வசம் சிறந்த யோசனை இருந்தால் அவர்கள் அதனைத் தாராளமாக முன்வைக்கலாம்.

எரிபொருள் விநியோகத்தில் காணப்படும் பிரச்சினை தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்

## இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட கபுடாஸை நம்பியதன் எதிர்வினையை அனுபவிக்கின்றோம்!

### விமல் காட்டம்



புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்துகிறோம். மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காவிடின் ஏற்படும் விளைவுகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

"கோ ஹோம் கோட்டா", "கோ ஹோம் குடும்பம்" என்ற எதிர்ப்பு "கோ ஹோம் 225" என தீவிரமடைவதை தடுக்க முடியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிடுகையில் –

நாடு பாரிய நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டுள்ளது அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டு மக்கள் நாளாந்தம் போராட்டங்கள் ஈடுபடுகிறார்கள். சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மனச்சாட்சியில் இருந்து ஒருபோதும் விடுபட முடியாது.

இரட்டைக் குடியுரிமை கொண்ட கபுடாஸ் பொருளாதாரத்தை மேம்படுத்துவார் என முழு அமைச்சரவையும் முழுமையாக நம்பியதன் எதிர்வினையை சிரேஷ்ட அமைச்சர்கள் தற்போது பின்வரிசையில் அமர்ந்து கொண்டு அனுபவிக்கிறார்கள்.

இரட்டைக் குடியுரிமையுடைய கபுடாஸ் கழுத்தில் சிவப்புப் பட்டி அணிந்தவர்களை வீதியில் செல்ல முடியாத நிலைமை ஏற்படுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் கடந்த அமைச்சரவையில் பலமுறை எடுத்துரைத்துள்ளோம்.எமது கருத்துக்கு கபுடாஸ் இடமளிக்கவில்லை.நெருக்கடி தீவிரமடைந்ததை நாட்டு மக்களுக்கு கடந்த மாதம் அறிவித்தோம்.

அதனைத் தொடர்ந்து நானும்,உதய கம்மன்பிலவும் மார்ச் 3 ஆம் திகதி அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டோம். என்னவாயிற்று ஏப்ரல் 03 ஆம் திகதி கபுடாஸ் உட்பட முழு அமைச்சரவையும் பதவி நீங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நாட்டின் தற்போதைய யதார்த்த நிலைக்கு அரசாங்கம் தலைவணங்க வேண்டும். தற்போது இளம் தரப்பினருக்கு அமைச்சரவை பதவி வழங்கப்பட்டுள்ளது. அவர்களால் சிறந்த முறையில் செயற்பட முடியாது. ஏனெனில் முழு அரச செயலொழுங்கும் பாதிப்புற்ற நிலையில் உள்ளன.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்துகிறோம். மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும். "கோ ஹோம் கோடா, கோ ஹோம் குடும்பம் என்ற எதிர்ப்பு பதம் கோ ஹோம் 225" என வியாபிப்பதை தவிர்க்க முடியாது. – என்றார்.

# ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்களால் பேராபத்தில் நாடு

## அநுரகுமார கொதிப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சாத்தியமற்ற யோசனை பயனற்றது. ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கத்தின் தீர்வு தீர்மானங்களை நாட்டு மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளபோவதில்லை.

ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்களால் முழு நாடும் இன்று பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது முடிந்தால் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை கொண்டு வாருங்கள் என மக்கள் விடுதலை முன்னணியில் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பிரதமரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இயற்கை காரணிகளை அடிப்படையாக கொண்டு சமூக கட்டமைப்பில் தற்போதைய பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருந்தால் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கத் தயார்.

பிரச்சினைகளைத் தோற்றுவித்த அரசாங்கம் பிரச்சினைக்கு தீர்வு காணும் யோசனைகளை முன்வைப்பது பயனற்றது.

உரபிரச்சினை தோற்றம் பெற்ற போது சபையில் பல விடயங்களையும், எதிர்காலத்தில் தோற்றம் பெறவுள்ள சவால்களையும் எடுத்துரைத்தோம்.

நிறுவனங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு நாங்கள் கருத்துரைக்கிறோம் என முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் சபையில் விமர்சித்தார்.

விவசாயிகள் உரம் கோரி வீதிக்கிறங்கி போராடுகையில் போராட்டத்தின் பின்னணியில் அரசியல் கட்சிகள் உள்ளன எனவும் அரசாங்கம் குறிப்பிட்டது.

உரகொள்கையை ஒருபோதும் மாற்றியமைக்கப் போவதில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிடுகிறார் உர கொள்கை தவறு என்று.

நாட்டுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தி விட்ட ஜனாதிபதி தவறை விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டில் உணவு பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி விட்டு தவறு என்று குறிப்பிடுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்.

விவசாயத்துறையை பாரிய நெருக்கடிக்குள்ளாக்கிய அரச தலைவர் பதவி விலக வேண்டும். பொருளாதார ரீதியில் அரச தலைவர் முன்னெடுத்த தீர்மானங்களும் தற்போதைய பிரச்சினைக்கு மூல காரணியாக அமைந்துள்ளன.

வரையறுக்கப்பட்ட நாணய அச்சிடல் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என பலமுறை சபையில் வலியுறுத்திய போது முன்னாள் நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் குறிப்பிட்டார். நாணயம் அச்சிடல் பண வீக்கத்தை துரிதப்படுத்தாது, புதிய கொள்கையின் அடிப்படையில் நாணயம் அச்சிடப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

வரையறையற்ற நாணயம் அச்சிடல் பணவீக்கத்துக்கு பிரதான காரணம் என மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கை செலவுகள் அதிகரிப்பு இயற்கை காரணியல்ல. ஜனாதிபதி, நிதியமைச்சர் உட்பட குழுவினர் மத்திய வங்கிக்கு வழங்கிய ஆலோசனைகளின் பிரதிபலனாகவே பணவீக்கம் அதிகரிக்கப்பட்டு,அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

டொலர் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் துரிதமாக்கப்பட்டது.

வெளிநாட்டு கையிருப்பு பூச்சியமான நிலைக்கு சென்றதன் பின்னரே மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கப்ரால் ரூபாவை தளம்பல் நிலைக்கு நிலைப்படுத்தினார். வெளிநாட்டு செலாவணியையும் அரசாங்கம் தவறான தீர்மானங்களால் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை தோற்றம் பெற்றது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் பிரச்சினைகளை அரசாங்கத்துக்குப் பல்வேறு வழிமுறையில் எடுத்துரைத்தார்கள்.

மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. பொறுப்பான அமைச்சர்களும் பொறுப்பற்ற வகையில் பதிலளித்தார்கள். சஷரில்லா ஹோட்டலில் நாள்களைக் கடத்தும் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடுத்தர மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை.

பொருளாதாரப் பிரச்சினைக்கும், மக்களின் அடிப்படை பிரச்சினைக்கும் தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வி என்பதை உணர்ந்ததன் பின்னரே மக்கள் வீதிக்கிறங்கி ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு வலியுறுத்துகிறார்கள்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பிரதமர் முன்வைக்கும் யோசனை பயனற்றது. புதிய அமைச்சரவை பதவியேற்று 24 மணித்தியாலத்துக்குள் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் எவ்வாறு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

மக்களின் நம்பிக்கையை பெறும் அரசாங்கத்தை அமைப்பது கட்டாயமாகும். முடிந்தால் அரசமைப்பில் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வாருங்கள். 19ஆவது திருத்ததைக் கொண்டு வருவதாக குறிப்பிட்ட யோசனைக்கு நன்றி. – என்றார்.

# 13 வயது சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் இருவர் கைது

13 வயது சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ ஒன்றைக் காட்டி 10 லட்சம் ரூபா கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டி வந்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 13 வயதான தனது மகளை 3 சந்தேக நபர்கள் வீடியோ காணொலி ஒன்றை முன்வைத்து கப்பம் கேட்பதாக கடந்த 2022.01.05 அன்று சிறுமியின் தாயாரால் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பொலிஸார் தலைமறைவாக இருந்த 3 சந்தேக நபர்களையும் அடையாளம் கண்டு, தேடுதல் மேற்கொண்டு வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை கப்பம் கோரிய சந்தேக நபரான மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியை சேர்ந்த 33 வயதுடையவரை கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைது செய்தனர். அதன் பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய இந்தச் சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட மற்றுமொரு சந்தேக நபரான சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 31 வயதுடையவர் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இரு சந்தேக நபர்களையும் பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமை குழுவினர் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேகநபர்களை எதிர்வரும் மே 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன் பிரதான சந்தேக நபரான சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபர் டுபாய் நாட்டுக்குகு தப்பிச் சென்ற நிலையில் அவரை கைது செய்ய பிடியாணை உத்தரவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பைச் சேர்ந்த மூவர் அகதிகளாக தனுஷ்கோடிக்கு!

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக நேற்று (புதன்கிழமை) அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடியை சென்றடைந்த இலங்கை தமிழர்களை மீட்ட மெரைன் பொலிஸார் தனுஷ்கோடி மெரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அவர்கள் மட்டக்களப்பில் இருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் சி.சி.ரி.வி. பதிவுகளை சோதனையிட்டு உண்மையைக் கண்டறிய நாமல் பணிப்பு

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனை சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி. பதிவுகளை சோதனை செய்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் கவலையடைகிறோம். இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைகளைக் கண்டறிய சாதாரண சோதனைகளை மேற்கொள்ள முடியும்.

அதாவது, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ வைத்ததைப்போன்ற காணொலி உள்ளிட்ட பல காணொலிகள் பரப்பப்படுகின்றன. இந்த காணொலிகள் அனைத்தையும் ஆராய வேண்டும்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கட்டாயமாக சி.சி.ரி.வி. காணப்படும். எனவே அதனை பரிசோதிப்பதன் மூலம் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள முடியும்.

இதன்மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். நாட்டில் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை அரசியலாக்காமல் தீர்வு காண வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 65 வீதம் அதிகரிப்பு!

*கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணத்தை அதிகரிப்பதாக இலங்கை கொள்கலன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*அதற்கமைய நேற்று (புதன்கிழமை) முதல் அமுலாகும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 65 வீதத்தால் அதிகரிக்கப்படுவதாக, அந்தச்சங்கம் அறிவித்துள்ளது.*

*எரிபொருள் மற்றும் பிற தொடர்புடைய உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.*


*அதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்டு கொள்கலன்கள் மூலம் போக்குவரத்து செய்யப்படும் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது.*

காலைக்கதிர் Kalaikkathir

## நாடு பாரிய நிதி நெருக்கடியில்

# விமானக் கொள்வனவு குறித்து கவனம் செலுத்துகின்றது அரசு!

## வெட்கப்பட வேண்டும் என்கிறார் ரணில்



நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் விமானக் கொள்வனவு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றமை வெட் கப்பட வேண்டியதாகும். சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நட்டமடைந்துள்ள நிலையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் கோப் குழு அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் விமானக் கொள்வனவிற்கு கவனம் செலுத்தியுள்ளமை தொடர்பில் முறையான விளக்கப்படுத்தலுக்காக சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் கோப் குழுவிற்கு அழைக்கப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க, எரான் விக்கிரமரட்ண ஆகியோர் சபையில் கூட்டாக வலியுறுத்தினர்.

21 விமானங்கள் கொள்வனவு தொடர்பிலான விளக்கப்படுத்தலுக்காக ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் கோப் குழுவிற்கு முன்னிலையாகவுள்ளனர். முழுமையான அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் சபையில் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் 21 விமானங்களை ஒப்பந்த அடிப்படையில் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்றில் பல்வேறு தரப்பினர் வாதங்களை முன்வைத்தனர்.

நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் 21 விமானங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளமை தொடர்பில் அந்த நிறுவனம் நாடாளுமன்றிற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டு நட்டமடைந்துள்ளது என கோப் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் விமான கொள்வனவு தொடர்பாகக் கவனம் செலுத்து வெட்கப்பட வேண்டியதாகும். அரச நிதி தொடர்பிலான முழு அதிகாரத்தையும் நாடாளுமன்றம் பொறுப்பேற்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். 21 விமான கொள்வனவு தொடர்பிலான சர்ச்சைக்கு உரிய தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் கோப் குழுவிற்கு இவ்வாரத்திற்குள் அழைக்கப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரதிடம் வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் தொடர்பிலான பாரதூரமான விடயங்களை கோப்குழு ஏற்கெனவே வெளியிட்டுள்ளது.

21 விமானங்கள் கொள்வனவு தொடர்பாகத் தற்போது பரவலாக பேசப்படுகிறது. இந்த விடயம் பற்றி அரச கணக்காளர் நாயகத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டேன். ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின் நிறைவேற்றுக்குழுவினர் கோப் குழுவிற்கு முன்னிலையாகியுள்ளனர். 21 விமானங்கள் கொள்வனவு தொடர்பிலான முழு அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிப்பேன். - என்றார்.



## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு நீதி கோரி சிலுவை சுமந்து போராட்டம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கோரி ஜெஹான் அப்புஹாமி என்ற நபர் சிலுவையை சுமந்தவாறு நீர்கொழும்பு – கட்டுவாப்பிட்டி தேவாலயத்திலிருந்து நடந்து வந்து காலி முகத்திடல் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

இன்று வியாழக்கிழமையுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் , தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது வரையிலும் நீதி வழங்கப்படவில்லை என்று பேராயர் உள்ளிட்ட பலராலும் குற்றஞ்சுமத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி நபர் இவ்வாறு சிலுவை ஏந்திய தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் அருட்தந்தையர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற அவர் , கை மற்றும் கால்களில் சலங்கைகளை அணிந்து தனது பயணத்தை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை வங்கி ஊழியர் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு அருகில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் ஆர்பாட்டம் ஒன்றை நேற்று (புதன்கிழமை) முன்னெடுத்திருந்தனர். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக இன்று அனைத்து மக்களும் கடும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர். இதனால் வங்கி வலையமைப்பிற்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலைமை காணப்படுகின்றது.

எனவே நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசு உடனடியாக பதவி விலக வேண்டும். இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது அனைவரது தலையாய கடமை அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். – எனத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊழலகளால் உழைத்த பணத்தை மக்களின் உடைமையாக்கு, அரச நிறுவனங்களின் விற்பனையை நிறுத்து, வாழ்க்கைச் செலவைக் குறைத்திடு, வெளிநாட்டு பண கறுப்புச்சந்தை மாபியாவைத் தடைசெய், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதை களை ஏந்தியிருந்தமையுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.



# பதுளை பஸ் நிலையத்தில்; கையெழுத்துப் போராட்டம்

பதுளை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டம் காலிமுகத்திடலில் இடம்பெறும் 'கோட்டா கோ ஹோம்' எனும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக பதுளையில் முன்னெடுக்கப்பட்டது.

'எதிர்ப்பை இங்கே பதிவோம் ' என்ற வேலைத் திட்டத்திற்கமைய கோட்டாவையும், அரசையும் வெளியேறக் கோரி கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது.

# சஹ்ரானின் வாகனம் எதுவும் கைப்பற்றப்படவில்லையாம் வீரசேகர பயன்படுத்தும் வாகனம் தொடர்பில் விளக்கம்

## பொலிஸ் தலைமையகம் அறிக்கை

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியாக செயற்பட்ட, பயங்கரவாதி சஹ்ரான்ஹஸீம்பயன்படுத்திய வாகனம்பொலிஸாரால் இதுவரை மீட்கப்படவில்லை என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. சஹ்ரான் ஹஷீமின் வீ 8 ரக வாகனத்தை முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பயன்படுத்துகிறார் என ஊடகவியலாளர் ஒருவர் சமூக வலைத் தளத்தில் இட்ட பதிவொன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பொலிஸ் தலைமையகம் அறிக்கை ஊடாக இதனை அறிவித்துள்ளது. எவ்வாறாயினும் அமைச்சர் சரத் வீரசேகர பயன்படுத்துகிறார் என கூறப்பட்ட டபுள்யூ. பி.சி.ஏ.எஸ். 1411 எனும் வீ 8 ரக வாகனம், கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை தாக்குதல் நடத்திய தற்கொலைதாரி மொஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட்டினுடையது எனவும் அது அரசுடமையாக்கப்பட்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இந்த டபுள்யூ.பி.சி.ஏ. எஸ். 1411 வாகனம், சி.ஐ.டி. யினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், கடந்த 2019 மே 13 ஆம் திகதி 2123 –3 எனும் அதி விசேட வர்த்தமானி ஊடாக அரசுடமையாக்கப்பட்டு, பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்கு வழங்கப்பட்டது. பொலிஸ் போக்குவரத்து பிரிவூடாக தற்போது இந்த வாகனம் பொலிஸ் விடே அதிரடிப் படையின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.– என பொலிஸ் தலைமையகம் அளித்துள்ள விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# தோட்டத் தொழிலாளர்களின் உரிமையை வழங்காவிடின் தொழில் திணைக்களத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

## செந்தில் தொண்டமான் காட்டம்



தோட்டத் தொழிலாளர்களின் 1, 000 ரூபா சம்பளம் மற்றும் அவர்களின் தொழில் உரிமைகளை பெற்றுக் கொடுக்காவிடின் தொழில் திணைக்களத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருதுபாண்டி ரமேஷ்வரன் உள்ளிட்ட இ.தொ.கவின் முக்கியஸ்தர்களுக்கும் தொழில் திணைக்கள ஆணையாளர் பிரபாத் சந்திரசிறி உள்ளிட்ட தொழில் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சு செவ்வாய்க்கிழமை கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பேச்சின் போது சில பெருந்தோட்ட கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளத் தொகையான 1, 000 ரூபாவை செலுத்தத் தவறியுள்ளதுடன், அவர்களுக்கு கிடைக்கப்பட வேண்டிய தொழில் உரிமைகள் மற்றும் சலுகைகள் மறுக்கப்பட்டு வருகின்றன என இ.தொ.க. ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தது.

மேலும், இது சம்பந்தமாக பல தடவைகள் தொழில் திணைக்களத்துக்கு எழுத்து மூல ஆவணங்கள் சமர்ப்பித்திருந்த போதிலும், அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தட்டிக் கழித்து வருவதாகவும் இ.தொ.க. குற்றம் சுமத்தியது.

மேற்படி, பேச்சின் நிறைவில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இ.தொ.க. தலைவர் செந்தில் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

'இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக் கொடுத்த 1, 000 ரூபா சம்பளம் முழுமையாக தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை. இதற்காக இன்று 500 தொழிலாளர்களது சம்பளம் சீட்டை கொண்டு வந்து தொழில் ஆணையாளரிடம் கையளித்தோம்.

எமக்கு முறையாக கிடைக்க வேண்டியதை கெஞ்சிக் கேட்கவேண்டிய தேவையில்லை. எமக்கான உரிமைகளையே நாம் கேட்டு நிற்கிறோம். எமது உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். எமக்கான உரிமைகள் முறையாக கிடைக்கப் பெறவில்லையெனின், தொழில் ஆணையாளர் மீது வழக்குத் தொடர வேண்டி ஏற்படும். – என்றார்.

வழக்கு தொடர்வதற்கான சூழ்நிலைக்குச் செல்லத் தேவையில்லை எனவும், தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய 1, 000 ரூபா நாளாந்த சம்பளம் விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் ஆணையாளர் இந்த சந்திப்பின் போது தங்களிடம் உறுதியளித்தார் என குறிப்பிட்ட இ.தொ.க. தலைவர் செந்தில், 10 நாள்களுக்குள் நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# உரிமைகளுக்காக போராடுகின்றவர்களை சுட்டுக் கொல்வதே இந்த அரசின் நோக்கு!

## இராதாகிருஷ்ணன் காட்டம்



ரம்புக்கனையில் மக்களுக்காக குரல் கொடுத்த – மக்களுக்காக போராடிய – மக்களின் உரிமைகளுக்காக களத்தில் இறங்கிய இளைஞர்களை சுட்டுக்கொன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, அந்த குடும்பத்துக்கு மலையக மக்கள் சார்பாக ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணனின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ராஜபக்ஷ அரசாங்கம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வந்ததோ, அப்போதெல்லாம் உரிமைக்காகப் போராடியவர்களை சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். அன்று மண்ணெண்ணெய் கேட்டு போராடிய மீனவர்களை சுட்டுக்கொன்றார்கள். ரத்துபஸ்வெல பகுதியில் தண்ணீர் கேட்டு போராடியவர்களை சுட்டுக்கொன்றார்கள். இன்று உரிமைக்காகப் போராடுகின்ற இளைஞர்களை சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.

இந்த செயற்பாடு ஜனநாயகத்துக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள பாரிய சவாலாகும். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைக்காகவும், தங்களுடைய கருத்துகளை சுதந்திரமாக சொல்வதற்கும் அனைத்து பிரஜைகளுக்கும் உரிமை உண்டு. அந்த வகையில், அதனை இல்லாது செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

இன்று இலங்கை இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் சர்வதேச சமூகம் எம்மை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் மனித உரிமை மீறல், யுத்த குற்றச்சாட்டுகள் என சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றது.

ரம்புக்கனை சம்பவம் இலங்கையில் மேலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதை சர்வதேசத்திற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது மேலும் எங்களுடைய பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும். சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையில் முதலீடப்படமாட்டா. வெளிநாடுகள் பொருளாதார ரீதியாக எங்களுக்கு உதவி செய்வதை மீண்டும் ஒரு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சு நடத்துவதற்கு இலங்கை குழுவினர் அங்கு சென்று பேச்சில் ஈடுபட்டு வருகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் உங்கள் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றதே என்ற கேள்வியை முன் வைத்தால் இவர்கள் கூறப் போகும் பதில் என்ன.

எனவே இளைஞர்களின் உணர்வுகளை புரிந்துக்கொண்டு அவர்களுடைய எதிர்பார்ப்புகளை புரிந்துகொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும். ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்.

கடந்த காலங்களைப் போல இளைஞர்களுக்கு எதிராக செயல்பட்டு அவர்களை தூண்டிவிட்டு ஒரு அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா என்ற ஒரு சந்தேகமும் எழுகின்றது.

வீதியில் இறங்கி போராடுகின்ற இளைஞர், யுவதிகள் தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூடு; சுயாதீன விசாரணை கோரப்படுகின்றது

ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக சுயாதீன விசாரணை அவசியம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

போராட்டக்காரர்களின் கோரிக்கையை கருத்திற்கொண்டு பொலிஸார் மற்றும் படையினர் கட்டுப்பாட்டுடன் செயற்படுகின்றமையை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

மேலும் நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டத்தரணிகள் தொடர்ந்தும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வார்கள் என அந்தச் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேகாலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகவுள்ளது.

ரம்புக்கனை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.

# ரம்புக்கனை சூட்டுச் சம்பவம்: பிரதமருக்கு மனஉளைச்சல்!

ரம்புக்கனையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸாரால் பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என நம்புகிறேன் என பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தமது உரிமைகளை பாதுகாக்கும் வகையில் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் ரம்புக்கனையில் இடம்பெற்ற அனர்த்தத்தைத் தொடர்ந்து ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளாகினேன் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# முகக்கவசம் கட்டாயமில்லை அரசின் முடிவு விவேகமற்றது!

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

வெளியில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்ற முடிவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ரத்து செய்யுமாறு மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த சங்கத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டார்.

கொரோனா பாதிப்பு எண்ணிக்கை குறைந்துவிட்டாலும், உலகின் பல்வேறு பகுதிகளில் புதிய பிறழ்வுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் அவை தொற்றுநோய்களின் மற்றொரு அலையை ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரித்தார். எனவே நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் நமது பாதுகாப்பைக் கைவிடுவது விவேகமற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக நாடு முழுவதும் மக்கள் தினசரி ஒன்றுகூடுகின்றனர் என்பதுடன், மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப்பொருள்கள் பற்றாக்குறையாக உள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

# தெற்கின் போராட்டங்களுக்கு சிவில் சமூக அமையம் ஆதரவு!

அண்மைய நாள்களில் தென்னிலங்கையில் முகிழ்த்து வரும் பொது மக்கள் போராட்டங்களுக்கான தார்மீக ஆதரவைத் தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

இவ்வாறு அந்த அமைப்பின் இணைப்பேச்சாளர்கள் கூட்டாக ஒப்பமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

இலங்கையின் தற்போதைய பொருளாதாரக் கையறு நிலையின் பின்னணியில் தீவில் பரிணமித்து வரும் நிகழ்வுகள் முற்றாக இயல்பிலும், பண்பிலும் புதியவை. அது மட்டுமன்றி தென்னிலங்கையின் நவீன வரலாற்றில் முன்னுதாரணங்கள் அற்றவையுமாகும். குறிப்பாக இந்தப் போராட்டங்களில் தெற்கின் இளையோரின் ஈடுபாடும், பங்கேற்பும் நம்பிக்கை தருவனவாக உள்ளன.

கடந்த 10 நாள்களாகக் காலிமுகத்திடலில் தெற்கின் பொது மக்கள் – குறிப்பாகவும் பெருமளவிலும் இளையோர் – நடத்தி வருகின்ற ஆக்கிரமிப்புப் (இருப்புப்) போராட்டம் தெற்கிற்கு முற்றாகப் புதியது.

காலம் காலமாக எம்மைக் கொன்று குவித்த உங்கள் அரசுத் தலைவர்கள் இன்று உங்களை நோக்கியும் ஆயுதங்களைத் திருப்பியுள்ளனர். உயிரிழப்புகளின் வலி எமக்கு நன்கு புரியும். எங்கள் இதயங்கள் பல்லாயிரக்கணக்கான எம்மவர் இறப்புகளால் உணர்வற்று மரத்துப்போய்விடவில்லை. மேலும் இளகிய உணர்வுகளுடன் தான் உள்ளது. ரம்புக்கணையின் அரசவன்முறைகளும் இழப்புகளும் இன்றும் கூட எம் மனங்களில் கண்ணீரை வரவழைக்கின்றன.

இந்நிலையில் தீவின் இன்றைய பொருளாதார நிலை தொடர்பாகத் தெற்கின் பொதுமக்கள் மேற்கொண்டு வருகின்ற சகல வகையான எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் தனது தார்மீக ஆதரவைத் தெரிவிக்க தமிழ் சிவில் சமூக அமையம் விரும்புகின்றது.

ஆனாலும் தமிழர்களாகிய எமது கடந்த எட்டு தசாப்த கால வாழ்வியல் அனுபவம், மனத் தடைகள் ஏதுமின்றித் தெற்கின் பொது மக்களுடன் அவர்களின் போராட்டங்களில் கை கோர்ப்பதை தடுத்து நிற்கின்றது.

இலங்கையின் இன்றைய பொருளாதாரக் கையறு நிலைக்குக் காரணமானவர்கள் யாரென்ற கேள்வியை எழுப்பி அதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினரே காரணமென நிறுவி நிற்கின்றனர் தென்பகுதி மக்கள். அந்த கற்பிதத்தின் வழியில் அவர்கள் ‘கோட்டா கோ கோம்’ என்ற கோத்துடன் வரலாறு காணாத வகையில் எழுச்சி பெற்றுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களாகிய எங்களின் வேதனை மிகு வரலாறு வேறுவிதமான அனுபவத்தையே எங்களுக்குத் தருகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புதல் என்ற கருப் பொருளிலேயே வெற்றி கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புதல் மட்டும் போதுமானதல்ல என்பதைச் சுட்டிப்பாகக் காட்டும் மிக அண்மைய வரலாற்று உதாரணம் இது. அந்த ஆட்சி மாற்றத்தால் தமிழ்த் தேசத்தின் கட்டமைப்புகள் மீது காலங்காலமாக நடத்தப்பட்டு வந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளில் எந்த மாற்றமோ அல்லது தொய்வோ ஏற்படவில்லை என்பதையும் எம்மால் மறக்க முடியாதுள்ளது.

‘சுதந்திர’ இலங்கையின் முதலாவது அரசமைப்பு, தமிழர்களதும் மலையகத் தமிழர்களதும் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுக்கும் வலுவின்றி இருந்தது. அதேவேளை பின் வந்த அரசமைப்புகளோ சிங்கள பௌத்தர்களல்லாத தேசத்தவர்களையும், சமூகங்களையும் ஒடுக்குவதைப் பிரதான நோக்கங்களிலொன்றாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டிருந்தன.

ஒடுக்குமுறைகளை விரைவாகவும், திறனாகவும் செய்வதற்கு ஏதுவாக, அரசமைப்பில், மையப்படுத்தப்பட்ட அதிகாரக் குவிப்பு உள்ளடக்கப்பட்டது. அரசமைப்பின் அடிப்படையிலே அரசும் சிங்கள பௌத்த மேலாதிக்கக் குணாம்சத்தைப் பெற்றுக் கொண்டது. அரசின் பொருளாதாரக் கொள்கைகளும், பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் கொள்கைகளும், நடைமுறைத் தீர்மானங்களும், இந்த அரசமைப்புகளின் பின் புலத்திலும் பலத்திலுமே மேற்கொள்ளப்பட்டன. இவை அனைத்தும் தான் பண்டா, டட்லி, சிறிமா, ஜே. ஆர், பிரேமதாஸ, சந்திரிகா, ரணில், ராஜபக்ஷக்களை உருவாக்கின.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் சகல அரசுகளாலும் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தவறான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவுகளை அறுவடை செய்யும் இந்தக் காலப்பகுதியில் பதவியில் உள்ள ஒரே காரணத்துக்காக ராஜபக்ஷ குடும்பத்தை மட்டும் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களாக முன்னிறுத்தி ஏனைய சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இவற்றுக்கெல்லாம் ஒத்தூதிய அதிகாரிகளுக்கும் பாவமன்னிப்பு வழங்கும் தெற்கின் போக்கு இன்று, நேற்றுத் தோன்றிய ஒன்றல்ல.

இலங்கையின் நவீன வரலாறு முழுவதும் ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களும் அரசாங்கங்களும் ஊழல் மிகுந்தவர்களாகவும் தவறான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியவர்களாகவுமே இருந்துள்ளனர். அவர்களின் ஊழல்கள், தவறான பொருளாதாரக் கொள்கைகள் எல்லாம் சிங்கள பௌத்த மேலாதிக்க அபிலாகைளின் காவலர்கள் என்று அவர்களின் பாத்திரத்துக்கு அவர்கள் விசுவாசமாகச் செயற்பட்ட காரணத்தால் கண்டு கொள்ளப்படாமலேயே விடப்பட்டன. அதன் இறுதி விளைவுதான் இன்றைய நிலை என்பதே வரலாறு எமக்குத் தந்த அனுபவமாகும்.

ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ்த் தேசத்தை இனவழிப்புச் செய்வதற்காக தொடர்ச்சியாகச் செய்து வருபவையான – அந்நியச் செலவாணியை உழைத்துத் தந்த மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பாகட்டும், அபிவிருத்திக்கான விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் என்ற பெயரில் கோடானு கோடிகளைக் கொட்டி தமிழர் தாயகத்தில் செய்யப்பட்ட நில ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களாகட்டும், நாட்டின் காற்பங்கினரின் மொழியுரிமையைத் தட்டிப்பறித்து அவர்களை உழைப்பாளர் அணியிலிருந்து அகற்ற முயன்ற தனிச் சிங்களச் சட்டமாகட்டும், அரச வேலைக்கு சிங்களம் கட்டாயமாக்கப்பட்டு அரச வேலைகளில் தமிழர்களின் பங்கைக் குறைக்கும் முயற்சியாகட்டும், தமிழர்கள் பொருளாதாரத்தில் வலிமை பெற்று விடக்கூடாது என்பதற்காக போரின் போது மட்டுமன்றி போரின் முன்னரும் பின்னரும்கூட அரசுகள் தொடர்ச்சியாகத் திட்டமிட்ட வகையில் செய்த அபிவிருத்திப் புறக்கணிப்புகள், பொருளாதார அழித்தொழிப்புகள், தமிழர்களுக்கான கல்வி வாய்ப்புகளின் மீதான சீரழிப்புகள், தொழிற் சக்தியான தமிழ் இளைஞர்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட நெருக்கடிகள் மூலம் அவர்களைத் தீவை விட்டு வெளியேற்றும் கைங்கரியங்கள் – இவை அனைத்துமே நாட்டின் பொருளாதார நலன்களுக்கும் அபிவிருத்திக்கும் பாதகமானது என்றோ பொருளாதாரத்தை வீழ்த்தும் என்றோ தெற்கில் ஒரு சிலரைத் தவிர எவருமே உறுதியாகக் கூறியதில்லை, யாரும் எதிர்த்து நின்றதில்லை. இன்றும் கூட யாரும் கூறவுமில்லை. மாறாக, இத்தகைய இனவழிப்பு நாசங்களைச் செய்வோமென வாக்குறுதி தந்தவர்களே தேர்தல்களில் வெற்றி பெற வைக்கப்பட்டனர். செய்தவர்கள் தேசிய வீரர்களாகப் போற்றப்பட்டனர்.

இனக்கலவரங்கள் எனப் பெயரிடப்பட்டு காலத்துக்குக் காலம் (1956, 1958, 1977, 1983) தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளாலும் சொத்துக்களின் அழிப்பினாலும் முழுநாட்டினதும் பொருளாதாரமும் எதிர்காலமும் பாதிக்கப்படுகின்றது என்பதை முன்னுணர்ந்து, அதன் விளைவாக இனக் கலவரங்களுக்குக் காரணமாயிருந்த அல்லது அதைத் தடுக்கத் தவறிய எந்த தென்பகுதி அரசியல்வாதியும் அடுத்து வந்த தேர்தல்களில் அவற்றுக்காக நிராகரிக்கப்பட்டதில்லை.

தமக்கெதிரான இத்தகைய இனவழிப்பு விடயங்களுக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக நடத்திய சாத்விகப் போராட்டங்கள் வன்முறை கொண்டு அடக்கப்பட்டன. குறிப்பாக இதே காலிமுகத்திடலில் இற்றைக்கு 66 ஆண்டுகளுக்கு முன்னர் 1956 ஜுன் 05 இல் இன்றைய நாள்களைப் போலவே அமைதியாக தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமர்ந்திருந்த தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கும் அதேநாள் கல்லோயாக் குடியேற்றத்திட்டப் பகுதியில் 150 அப்பாவித் தமிழ் விவசாயிகள் கொல்லப்பட்டதற்கும் மனிதாபிமான அடிப்படையிலன்றி ஆகக் குறைந்தது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதகமானது என்ற அளவில் கூட எதிர்ப்புத் தெரிவித்து தெற்கின் எந்த ஒரு அரசியல்வாதியும் குரலெழுப்பியதில்லை. அவ்வாறு குரலெழுப்பக் கூடிய ஓர் அரசியல் தலைவர் அங்கு தோற்றம் பெற்றதுமில்லை. அதற்கான பிரதிபலிப்பு தென்பகுதிப் பொது மக்களிடம் கூட காணப்பட்டதுமில்லை.

தமிழர்கள் இவ்வாறெல்லாம் தமது நியாயமான அரசியல் வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்டு சாத்விக வழிப் போராட்டங்களும் வன்முறைகள்மூலம் புறக்கணிக்கப்பட்ட போது, ஆயுதமேந்திப் போராட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டனர். அப்போது தமிழர்களுடனான முரண்பாடுகளை வன்முறையற்ற வழிகளின் மூலம் தீர்க்க வேண்டும் என்று தெற்கிலிருந்து யாரும் புறப்பட்டதில்லை. அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்ததில்லை. மாறாக நாட்டின் செல்வத்தை அழித்தும் கடன்களை வாங்கியும் இனவழிப்புப்போரைத் தொடர்ந்த அரசின் ஆயுத அடக்கு முறைகளுக்கு தெற்கு எப்போதும் ஆதரவாக இருந்ததுடன் அதற்கு பொருத்தமானவர்களென தாம் கருதியவர்களையே தேர்தல்களில் தெரிவு செய்தும் வந்தது.

அனைத்தினதும் உச்சமாக 2006 முதல் தமிழ் மக்கள் மீதான தனது ஆக்கிரமிப்புப் போரை மனிதாபிமான மீட்பு யுத்தம் என்ற நயவஞ்சகத்தனமான பெயரில் முன்னெப்போதையையும்விட கொடூரமான பாரிய தமிழினப் படுகொலைகளுடன் ராஜபக்ஷ அரசு செய்து வந்தது. ஈற்றில் 2009 இல் முள்ளிவாய்க்காலில் 21 ஆம் நூற்றாண்டுக்கான உலகின் முதலாவது இனப் படுகொலையுடன் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை அரசு முடித்து வைத்தது. அப்போது அதைப் பெருவெற்றியாகக் கொண்டாடிய தெற்கு இன்று அதே ‘வெற்றி’யின் நாயகர்களை வீட்டிற்குப் போ எனக் கொந்தளித்து எழுச்சியுற்று நிற்பது காலத்தின் முரணேயன்றி வேறென்ன?

இன்று ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஊழல்களால் அதிர்ச்சியுற்றுள்ளதாகக் காட்டிக்கொள்ளும் இதே தெற்குத்தான் 2019 இன் ஜனாதிபதி தேர்தலிலும் 2020 இன் நாடாளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஷ குடும்பத்தினரை அமோக வெற்றி பெற வைத்தவர்கள் என்பதை மறக்க முடியாது. 2015 இல் தெற்கில் ராஜபக்ஷ குடும்பத்தினர் 10 ஆண்டுகளாகச் செய்த ஊழல்களால் துவண்டிருந்த சிங்களவர்கள் வாக்களிப்பில் சலிப்புற்று பங்கேற்காமல் இருந்த அதேவேளை தமிழ் பேசும் தேசங்களின் வாக்குகள் ராஜபக்ஷக்களுக்கு எதிராக ஒன்று திரண்டதால்; ராஜபக்ஷ குடும்பம் அரசமைக்கும் உரிமையை இழந்தது. ஆனால் 05 ஆண்டுகளுக்குள் ஈஸ்டர் தாக்குதல்களின்மூலம் முஸ்லிம்கள் மேல் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட வெறுப்பு, ‘சிறுபான்மையினர்’ எமது நாட்டின் தலைவரைத் தீர்மானிப்பதா என்ற மேலாதிக்க மனப்பான்மையால் ஏற்பட்ட ஆத்திரம், ரணில் – மைத்திரி அரசாங்கள் தமிழர் கேட்கும் அரசியல் உரிமைகளைக் வழங்கப் போகின்றார்கள் என்ற தவறான கணிப்பு என்பவற்றால் சிங்கள தேசம் ஒன்றென பேரெழுச்சி கொண்டது. தெளிவான ஊழல் வரலாற்றைக் கொண்ட ராஜபக்ஷ குடும்பத்தைத் தெற்கு மீளவும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது. ஐந்து ஆண்டுகளில் சிங்கள மக்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்துக்கான காரணத்தின் சாராம்சம் என்ன? தென்பகுதி வாக்காளர்களுக்கு ராஜபக்ஷக்களின் ஊழல்வாதிகள் என்ற அடையாளத்திலும் விட போட்டியில் நின்றவர்களுக்குள் ராஜபக்ஷக்களே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் விட்டுக் கொடுப்பற்ற பாதுகாவலர்கள் என்ற அடையாளமே முக்கியமான தீர்மானத்திற்குரிய விடயமாக இருந்தமையே.

இன்றும் கூடம் தமிழர்களிடம் முறையிடவென நீண்ட துயர்களின் பட்டியல் ஒன்று உள்ளது. ஒட்டு மொத்தமான இன அடையாள அழிப்புக்கு அப்பால் எந்த ஒரு மனிதரினதும் உணர்வுகளில் இலகுவாகத் தொற்றக் கூடியவையான, இந்தப் பட்டியலில் உள்ள – சிறீலங்காப் படையினராலும் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் ஆயுதப் போரின் இறுதியில் உறவுகளாலேயே படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் நிலையறியாது கலங்கும் ஆயிரமாயிரம் உறவுகள், அவர்களைத் தேடி 1000 நாள்களுக்கும் மேலாக வீதி ஓரங்களில் கொட்டகை அமைத்துப் போராடி வரும் தாய்மார், படைகளாலும், வன வளத் திணைக்களத்தாலும் தொல்லியல் திணைக்களத்தாலும் என இயலுமான எல்லா வழிகளாலும் தங்கள் வாழிடங்கள், வயல் நிலங்கள், என வாழ்வாதாரமான நிலங்களும் கிராமங்களும் பறிக்கப்பட்டு தங்கள் நிலத்துக்குத் திரும்பும் காலம் வராதா என ஏக்கமுடன் காத்திருக்கும் குடும்பங்கள், விசாரணைகளே இன்றிப் பல்லாண்டுகளாக சிறைகளில் வாடும் எங்கள் உறவுகள் என்பன உட்பட – எங்கள் துயரங்கள் தொடர்பாக தெற்கிலிருந்து இன்றுவரை காத்திரமான ஓர் ஆதரவுக் குரல் மட்டுமல்ல அனுதாபக் குரல் கூட வெளிப்பட்டதை நாங்கள் அறிந்ததில்லை.

முள்ளிவாய்க்காலின் பின்னான போர் ஓய்ந்த கடந்த 13 ஆண்டுகளில் கூட இலங்கையில் அந்நிய முதலீடுகள் அதிகரிக்காததையொட்டி சிறீலங்காவின் அரசுகள் மட்டுமல்ல தென்பகுதி மக்களும் புத்திஜீவிகளும் கவலை கொண்டதில்லை. அது மட்டுமல்லாது, போர்க்குற்றங்களுக்காக இலங்கை ஜெனீவாவில் சிக்கல்களைச் சந்தித்தபோதோ அல்லது மனித உரிமைத் தரக் குறைவுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பீ. பிளஸ் வரிச்சலுகையை இழந்தபோதோகூட மனித உரிமை நிலைமையைச் சீரமையுங்கள் தமிழர்களுட்பட ஏனைய தேசங்களினதும் சமூகங்களினதும் உரிமைக் கோரிக்கைகளைச் சுமுகமான வழிமுறைகளில் தீர்த்துக் கொள்ளுங்கள், அதன்மூலம் பொருளாதாரத்தைக் காப்பாற்றுங்கள் எனத் தெற்கிலிருந்து எந்தக் குரலும் எழுந்ததில்லை. மாறாக இலங்கை அரசு, மனித உரிமைகளை வலியுறுத்தாத, தமிழர்களுக்காக பரிந்து வராமல் நிதி உதவிகளைச் செய்யக்கூடியவர்கள் எனத் தாம் கருதிய நாடுகளிடம் நிதியுதவி கோரிச் சரணடைந்தது. அதையே தெற்கும் வரவேற்றிருந்தது.

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# வரிசை யுகத்துக்கு எப்போது தீர்வு? சஜித் மஹிந்தவிடம் சபையில் கேள்வி



20 ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்தத்தை கொண்டுவந்து எம்மை ஏமாற்ற நினைக்கவேண்டாம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கியே ஆக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

அத்துடன் அத்தியாவசிய பொருள்களுக்காக மக்கள் வரிசையில் இருக்கும் பிரச்சினைக்கு எப்போது தீர்வுகாண்பது என்பதை பிரதமர் தெரிவிக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட உரையாடலொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை தொடர்பாக இந்த நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று பிரதமர் சபையில் கூறியிருந்தார்.

ஆனால் நாங்கள் இரண்டுவருடங்களுக்கு முன்னரே அதனை புரிந்துகொண்டோம். இந்த நாட்டிலுள்ள செல்வந்தர்களுக்கு 60 ஆயிரம் ரூபா வரிச் சலுகையை வழங்கி,நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை 2 வீதத்தால் குறைத்தும் நாட்டின் தர நிலையை குறைத்தும் செயற்பட்ட போது, அதுதொடர்பில் நாங்கள் எச்சரித்தபோது எங்களை விமர்சித்தார்கள்.

இப்போது பொருளாதார நெருக்கடிக்கு பீ.பீ.ஜயசுந்தர, கப்ரால், லக்ஷ்மன் ஆகியோர் மீது குற்றம் சுமத்தி தப்பித்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது.

நாட்டுக்கு இலாபம் கிடைக்கும் வகையிலேயே கடன்களை பெற்றிருக்க வேண்டும். ஆனால் இன்று எரிபொருள், மருந்து, மருத்துவ உபகரணங்கள், உணவுப் பொருள்களுக்கான பணத்தை இவர்கள் வட்டி செலுத்துவதற்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு என்ன நடக்கப்போகிறது என்பதை நாங்கள் புரிந்துகொண்டே இரண்டு வருடங்களுக்கு முன்னர் என்ன செய்ய வேண்டும் என்று கூறினோம்.

இருதரப்பு பேச்சுகளை நடத்துமாறு கோரினோம். ஜப்பான், இந்தியா, சீனாவுடன் கதைக்கவில்லை.

இந்த அரசாங்கம் வேண்டுமென்றே இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் நிதி முகாமைத்துவம் தொடர்பில் கதைக்கின்றார். ஏன் சர்வதேசத்துடன் செய்யும் கொடுக்கல் வாங்கலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் செய்யவில்லை என்று கேட்கின்றோம்.

இவர்கள் செய்த தவறுகளே இன்று அனைத்துக்கும் மக்கள் வரிசையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகாண நாங்கள் 9 திட்டங்கள் தொடர்பில் கூறியுள்ளோம். சர்வதேச நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?, கடன் வரிகளை குறைப்பதற்கு பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளனவா? எதனையும் அரசாங்கம் செய்யவில்லை.

தற்போது தமக்கு வேண்டியவாறு 20ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்தத்தை கொண்டுவந்து எம்மை ஏமாற்ற நினைக்கவேண்டாம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கியே ஆக வேண்டும்.

இந்த விடயத்தில் எங்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம். நாட்டுக்கு உண்மையை கூறுங்கள்.

அத்துடன் எப்போது எரிபொருள்,சமையல் எரிவாயுக்கான வரிசை முடிவடையும் என்று கூறுமாறு பிரதமரிடம் கேட்கின்றோம்.

எப்போது டீசல், பெற்றோல் வரும் என்றும் கேட்கின்றோம். நிலக்கரி தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நிலக்கரியுடன் வந்த கப்பலை ஏன் விடுவிக்க முடியவில்லை.

நீங்கள் கடந்த காலங்களில் டொலர் இருப்பதாக மக்களை ஏமாற்றினீர்கள்தானே. யுவான் வந்திருந்த போது அதனை டொலராக கூறி ஏமாற்றியுள்ளீர்கள்.

இதுவா தீர்வு. அதனால் தயவு செய்து எப்போது இந்த அரசாங்கம் மக்களை மரண நிலைக்கு கொண்டு செல்வதை நிறுத்தும் என்று கேட்கின்றோம்.

எனவே மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதியும், அரசாங்கமும் பதவி விலக வேண்டும். இப்போது உண்மையை புரிந்துகொண்டு அரசாங்கத்தில் இருந்து ஒரு குழு எங்களின் பக்கத்தில் அமர்ந்துள்ளது.

இவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை. எவ்வாறாயினும் வீதியில் போராடும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

# தெற்கின் போராட்டங்களுக்கு ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய இந்த பொருளாதார நிலைக்கு இவையுமே காரணம் என்பதே எமது புரிதலாகும்.

இலங்கையின் வரலாற்றில் இதுவரை நடந்தேறிய அரசியற் தீர்மானங்கள், பொருளாதாரத் தீர்மானங்கள், பொருளாதாரத்தைப் பாதிக்கும் தீர்மானங்கள், ஊழல்களையும் முறைகேடுகளையும் சகித்துக் கொண்டும் சாத்தியமாக்கிக் கொண்டிருக்கும் உளவியற் கட்டுமானம் என்பவை சிங்கள பௌத்த மேலாதிக்கக் கருத்தியலிலும், அதன்மேல் கட்டப்பட்ட அரசியல் அமைப்பு, அரசு என்பவற்றாலுமே சாத்தியமாகியுள்ளன.

ஆனாலும் இன்றும்கூட நாட்டின் சகல சிக்கல்களுக்கும் காரணமான இனச்சிக்கல்கள் தொடர்பிலும் அவற்றுக்குக் காரணமான பௌத்த சிங்கள மேலாதிக்க அபிலாஷைகள் தொடர்பிலும் தெற்கின் அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி எழுச்சி பெற்று நிற்கின்ற பொது மக்களிடமும் அவர்களுள் பெருமெடுப்பில் பங்கு கொள்ளும் இளையோரிடமும் அவர்களால் ஆள்வதற்கு பொருத்தமானவர்கள் எனப் பரிந்துரைக்கப்படும் புத்திஜீவிகளிடமும் முற்போக்கான மாற்றங்களேதும் ஏற்பட்டதாக எமக்குத் தெரியவில்லை. காலிமுகத் திடலில் தன்னெழுச்சியாக கூடியுள்ள இளையோரிடமிருந்துகூட இவை தொடர்பாகக் காத்திரமான குரலேதும் வெளிப்பட்டதாக நாம் உணரவில்லை.

அரசியல்வாதிகள் எம்மை இனங்களாகப் பிரித்துவிட்டார்கள், நாம் எல்லோரும் இலங்கையர்கள், தமிழிலும் தேசிய கீதம் பாடலாம், எல்லோரும் ஒன்றாக வாருங்கள் என மேம்போக்கான அறைகூவல்கள் விடப்படுகின்றனவே தவிர, தமிழர்கள் உட்பட இந்நாட்டின் ஏனைய தேசங்களினதும் சமூகங்களினதும் நியாயமான கரிசனைகள் மற்றும் அச்சங்கள் தொடர்பில் காத்திரமான மாற்றம் எதையும் இன்று போராடுபவர்களிடையே இருந்தும் கூட யாரும் முன்மொழிந்ததை நாம் காணவில்லை. காலி முகத் திடலில் தமிழில் தேசிய கீதம் பாடுவதைவிட தமிழ் மக்களது பிரச்சினைகள் பன்மடங்கு கடுமையானது, வலி மிகுந்தது, அச்சம் தரக்கூடியது. ஒரு தேசமாக எமது இருப்பு இந்நாட்டில் எந்த அளவுக்கு அச்சுறுத்தலில் உள்ளது என்பதை இன்று போராட எம்மையும் வருமாறு தெற்கிலிருந்து அழைக்கும் யாரும் உணர்ந்தார்கள் எனத் தெரியவில்லை.

பௌத்த மதத்துக்கான முன்னுரிமையும் மகாவம்ச மன நிலையும் ஒற்றையாட்சி மேலான சிங்கள மக்களின் அசாதாரணமான பற்றுறுதியும் ஏனைய இனங்களையும் சிங்கள இனத்தையும் இரு வேறு துருவங்களில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளன என்பதையோ, இவைதான் இன்றைய நிலைக்கு நாடு வரப்போவதற்கான முன்னரே தெரிந்த அறிகுறிகளைத் தாங்கள் உணராமைக்கு காரணம் என்பதையோ சாதாரண சிங்கள மக்கள் மட்டுமல்லாது இன்றைய மக்கள் எழுச்சிகளின் முக்கியஸ்தர்களும் கூட இன்றும் விளங்கிக் கொண்டார்கள் எனத் தெரியவில்லை. அதற்கான சமிக்ஞைகளெதையும் எம்மால் காணவும் முடியவில்லை.

இத்தனை நாள்களில் காலி முகத் திடலில் இருந்துதான் ஓரளவுக்குக் கட்டமைக்கப்பட்ட சில முன்மொழிவுகள் ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த முன்மொழிவுகளில் ஒன்றுகூடத் தமிழ் மக்களினதும் ஏனைய தேசங்களினதும் சமூகங்களினதும் துயரங்களுக்கான விடைகளாகக் காணப்படவில்லை. சொல்லப்போனால் இவர்களால் கூட நாட்டின் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள பௌத்த மேலாதிக்க அபிலாஷைகளுக்கு மாற்றீடுகள் முன்வைக்கப்படவில்லை.

மேலும் இன்று வெறுமனே முன்மொழியப்படும் ஆட்சி மாற்றம் தமிழருக்கு எதையும் தந்துவிடப்போவதில்லை. 2015 இல் தமிழ் பேசும் இனங்களால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தால் பதவிக்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டினாற்கூட தமிழர்கள் மற்றும் ஏனைய தேசங்கள் தொடர்பிலான அரசின் அணுகுமுறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. மாறாக தமிழர்களை ஏமாற்றி அவர்களையும் இணைத்துக் கொண்டு தமிழர் தாயகத்தில் 1, 000 விகாரைகள் கட்டுவதுட்பட, தமது தமிழர் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பைத் தொடரும் பொறிமுறைகளை தொடர்ந்தமையே நடந்தது. அதுமட்டுமல்லாது மைத்திரி – ரணில் அரசு ஜெனிவாவில் தமது பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பட்டிருந்த தடைக்கற்களை தமிழர் பிரதிநிதிகளின் உதவியைக் கொண்டே அகற்றிக் கொண்டது என்பதையும் நாம் மறக்கவில்லை.

இத்தகைய பின்னணியில் தமிழர்களாகிய நாம் இன்று தெற்கில் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சிகள் தொடர்பாகக் கரிசனையுடன் அணுகும் அதே வேளையில் தமிழர்களாகிய எமக்கு போராட்டக்காரர்களுடன் கைகோர்ப்பது தொடர்பில் எமது நீண்ட கால இருப்புத் தொடர்பான கரிசனைகளுடனான பரிசீலனையுடன் கூடிய முடிவுகளை அவதானமாக எடுப்பதைத் தவிர வேறு வழியேதும் இல்லை என்றே தெரிகின்றது.

இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் பொது மக்களே, இளைஞர்களே, நாம் எமது தோழமையை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். உறுதியாகத் தெரிவிக்கின்றோம். நீங்கள் இன்று போராடப் புறப்பட்டதற்கான காரணங்களான பொருளாதார விடயங்கள் எம்மையும் தாக்குகின்றனவாம். ஆனால் எம் தோள்களை உங்களுடன் இணைப்பதில் எங்களுக்கு உள்ள மனத் தடையை ஏற்படுத்த காரணமாக இருப்பது தமிழர்களாகிய எம் மனதில் எழுந்து நிற்கின்ற அச்சமும் களைப்பும் தருகின்ற கேள்வியொன்றே. ஒரு தேசமாக எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான எங்களது நீண்டகாலக் கேள்விகளுக்கு தங்களிடமாவது பதிலேதும் உண்டா? – என்றுள்ளது.

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்





மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இலங்கை வங்கி சங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 'கோட்ட வீட்டுக்கு போ' என்ற தொனிப்பொருளில் நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்க வங்கி சங்கம் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்துக்குஅழைப்புவிடுத்ததையடுத்து மட்டக்களப்பு சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை காந்தி பூங்காவில் அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம், பெற்றோலிய கூட்டுதாபன சங்கம் உட்பட தொழிற்சங்கங்களை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் பகல் 12.30 மணிக்கு ஒன்றிணைந்து அரச வங்கிகளில் மேற்கொள்ளப்படும் அரசியல் அழுத்தங்களை நிறுத்து, வாழ்க்கை செலவை குறைத்திடு, மருந்து பொருள்கள், மின்சாரம், எரிபொருள், பால்மா என்பவற்றை தடையின்றி வழுங்கு, ஊழல் ஊடாக சம்பாதித்த பணத்தை மக்கள் உடைமையாக்கு, விவசாயிகள், மீனவர்கள், சிறு வணிகர்களுக்கு நிவாரணம் வழங்கு, கோட்டா வீட்டுக்கு போன்ற பல வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷமிட்டவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# நாம் எப்படி உங்களுடன் கை கோர்த்துக் கொள்வது? காலி முகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஒரு மடல்!



சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிகளாகவும் நோக்கியதாலேயே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தியமும் அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாக புறக்கணித்தது என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் போராட்டம் குறித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் நேற்று புதன்கிழமை விடுத்துள்ள திறந்த மடலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மடலின் விவரம் வருமாறு:-

தங்களின் ஜனநாயகப் போராட்டம் கடந்த பத்து நாள்களுக்கு மேலாக தன்னெழுச்சியாக நடப்பதையிட்டு நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில் ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம் எனக் கடந்த 70 ஆண்டுகளாக எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் நீங்கள் நடாத்துவது வாழ்தலுக்கான போராட்டம். நாம் நடத்தியது வாழ்வுரிமை இருப்பிற்கான போராட்டம். இரண்டிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு.

தமிழ் மக்கள் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு விதமான அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். இனக் கலவரங்களான 1956, 1958, 1977, 1978 மற்றும் நான்கு கட்ட ஈழப்போர் என வார்த்தையில் வர்ணிக்க முடியாத துயரத்தை எதிர்கொண்டோம்.

சமத்துவமான வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டதன் விளைவே வன்முறையாக தோற்றம் பெற்றுள்ளது.

சிங்களவர்கள் தமிழர்களை எதிரிகளாகவும், விரோதிகளாகவும் நோக்கியமையாலே தமிழர்கள் சிங்கள தேசத்தை அயல்நாடாக உணர்ந்தனர். உண்மையும், நீதியும், சத்தியமும், அறவுணர்வும் தமிழர்களின் கோரிக்கையில் இருந்த போதும் சிங்கள தேசம் அதை முழுமையாகப் புறக்கணித்தது.

அடிமையாக, இரண்டாந்தர மனிதர்களாக நடத்தியதன் விளைவே – ஆதிக்க எதிர்ப்பின் குறியீடாகவே – தலைவர் பிரபாகரன் தோற்றம் பெற்று, யுத்தம் உருவெடுத்தது. அழகிய தேசம் உருக்குலைந்து, பொருளாதாரமின்மையிலும் சிக்குண்டு, சின்னாபின்னமாக சிதைவுற்று, இப்போது இனவாதிகளே, இனவாதிகளை அகற்றும் ஜனநாயக யுத்தத்தில் ஈடுபடுகிறீர்கள்.

ஆனால்நாம்மகிழ்ச்சியடையவில்லை. நிலப்பறிப்பு, குடிப்பரம்பல் மாற்றம், மொழிச்சிதைப்பு, பண்பாட்டுச் சிதைப்பு, பொருளாதார அழிப்பு, உயிரிழப்பு தனிச் சிங்கள சட்டம். இது மட்டுமா? பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், சந்திரிக்கா – பிரபாகரன் ஒப்பந்தம், ரணில் – பிரபாகரன் ஒப்பந்தம் என பலவற்றால் ஏமாற்றப்பட்டுள்ளோம். ‘இறப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல’ என்பதே தமிழர்கள் மனோநிலை.



ஆகவே இந்த ஜனநாயகப் போராட்டத்தை நடாத்துவது யார்? உங்கள் அடிப்படைக் கொள்கை என்ன? 225 பேரும் வேண்டாம் என்றால் நீங்கள் கோரும் இடைக்கால அரசை நடத்துவது யார்? ஆட்சி மாற்றத்தாலோ அல்லது ஜனாதிபதி மாற்றத்தாலோ தற்போதைய பிரச்சினை தீர்ந்து விடுமா? உங்களிடம் என்ன திட்டம் இருக்கிறது? உங்களைப் பின்னுக்கு இருந்து இயக்குவது யார்? அரச சார்பற்ற நிறுவனங்களா? அல்லது பன்னாட்டுத் தூதரகங்களா? அல்லது சிங்கள பெருவர்த்தகர்களா? இதுவரை இந்தப் போராட்டத்தின் தலைமை யாரென வெளிப்படையாக உணர முடியவில்லை.

‘புரட்சி என்பது மாலை நேரத்து விருந்தல்ல’ என்றார் மாவோ.

இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று சிங்கள கலைஞர்கள் அழைத்துள்ளனர். நல்லது.. வரவேற்கின்றோம். ஆனால் நாம் ஏன் வரவேண்டும்? எதற்காக வரவேண்டும்? உங்கள் போராட்டத்திற்கும், எமக்கும் என்ன சம்பந்தம் உண்டு? இதற்கு வருவதால் தமிழர்களுக்கு என்ன நன்மை பயக்கும்? போராட்ட இடத்தில் தமிழில் தேசிய கீதத்தை பாடவே முடியவில்லை. இனி இழப்பதற்கு ஏதுமற்ற ஏதிலியாய் உள்ள நாம் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேல் அனுபவித்தவற்றில் சில விடயங்களை நீங்கள் இப்போது எதிர்கொள்கிறீர்கள்.

முதல் முறையாக எதிர்கொள்வது என்பது கடினம் தான். அதை நாமும் உணர்ந்து கொள்கிறோம். எம்மைத் தமிழனாக அல்ல, மனிதனாகக் கூட நீங்கள் நினைக்கவில்லையே! மனிதாபிமானத்திற்கு கூட பயங்கரவாத முத்திரை பதித்து, பொருளாதார தடை விதித்து, எம்மை நசுக்குவதில் கூட்டாக இன்பம் நுகர்ந்தவர்கள் நீங்கள்.

எமது நிலைமையை புரிந்து கொண்ட ஒரு சில சிங்கள முற்போக்காளர்களும் உள்ளனர் என்பதையும் நாம் புரிந்து கொள்கின்றோம்.

குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் என எந்த விதமான பாகுபாடும் இன்றி கொலை, கைது, கடத்தல், என வகை தொகையின்றி உங்கள் வஞ்சத்தை தீர்த்துக் கட்டினீர்களே! 2009 இறுதி யுத்தத்தில் 146,679 பேரை இனப்படுகொலை செய்தீர்களே! உணவு, மருந்து உறைவிடம் இல்லாமல் கொத்துக் குண்டுகளும், பொஸ்பரஸ் குண்டுகளும் வீசி எம்மை அழித்தீர்களே! பல ஆயிரம் பேரைக் காணாமல் போகச் செய்தீர்களே. உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை இன்று வரைக் காணவில்லையே!..

ஓர் இனத்தை அழித்து விட்டு அவர்கள் தெருவில் நின்று ஓலமிடும் போது நீங்கள் பட்டாசு கொளுத்தி பால் சோறு உண்டு மகிழ்ந்தீர்களே! இதுதானா பௌத்தத்தின் பஞ்சசீல தம்பதக் கோட்பாடு? ‘ஊழிற் பெருவலி யாவுழமற்றொன்று சூழினும் தான் முந்துறும்’ என்றான் வள்ளுவன். இப்போது அறம் உங்களை விரட்டுகிறது.

கல்வி அறிவுடைய முற்போக்கு சிங்களவர்கள் கூட தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. பௌத்த மகா சங்கங்கள் கல்வியியலாளர்கள் கூட வகுப்புவாத இனவாதத்தையே முன்னிலை படுத்துகிறீர்கள். சமஷ்டியை தமிழீழம் என்று சாதாரண சிங்கள மக்களுக்கு இனவாதத்தை ஊட்டுகிறீர்கள்.

சிங்கள இனவாத ஊடகங்களும், அரசியல்வாதிகளும் சொல்வதையே தாரக மந்திரமாக ஏற்றுக் கொள்கிறீர்கள். யுத்தம் முடிவடைந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை எத்தனை ஜனநாயகப் போராட்டங்கள் நடத்தி விட்டோம். அவையெல்லாம் உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா? அல்லது எமது கோரிக்கைதான் நியாயமில்லையா? இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் தமிழர்களை ஒரு கணம் நினைத்துப் பார்த்தீர்களா? தமிழரின் பூர்வீக மரபுவழி தாயக நிலத்தை அபகரித்து புதிய வரலாறு உருவாக்குவது எல்லாம் உங்கள் பார்வையில் சரி தானா?

பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், அவசரகால தடைச் சட்டம் இரண்டையும் வைத்து எவ்வளவு நசுக்குகிறீர்கள். நீங்கள் போராடினால் ஜனநாயக உரிமை. அது தொடர்பில் பொலிஸாரும், இராணுவத்தினரும், நீதிமன்றமும் எவ்வாறு நடந்து கொள்கின்றன? நாங்கள் போராடினால்அதுபயங்கரவாதம். ஒருசிவில்செயற்பாட்டாளனாகிய நானே கடந்த பத்து ஆண்டுகளில் சிறை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் 23 தடவைகள் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணை. இவ்வாறு என்னைப்போல் பலர் உண்டு.

இது எல்லாம் உங்களுக்கு புரியாது! இப்படி இருக்கையில் நாம் எப்படி இலங்கையராய் சிந்திக்க முடியும்? இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சினை உண்டு என்பதையாவது புரிந்து கொண்டீர்களா? குறைந்த பட்சம் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பதையாவது ஏற்றுக்கொள்வீர்களா? இனியாவது உணர மாட்டீர்களா?




எதுவும் இல்லாமல் வெறுமனே ஆட்சி மாற்றத்திற்கு குடும்ப ஆட்சியை அகற்றுவதற்கு எம்மோடு கை கொடுங்கள் என்பது எந்த வகையில் நீதியானது. யுத்த வெற்றி நாயகர்கள் என மகுடம் சூடி பௌத்த தேசியவாத மேட்டிமைத்தனத்துடன் ஏகோபித்து வாக்களிக்கும் போது உங்கள் பகுத்தறிவு எங்கே போனது?

தமிழ் மக்கள் ராஜபக்ஷக்களுக்கு ஒரு போதும் வாக்களிக்கவில்லை (2005, 2010, 2015, 2019 ஜனாதிபதி தேர்தலிலும்) 2009ல் தமிழினத்தை அழித்த போது உங்களை மெருகூட்டிய சிங்கக் கொடியுடனே இன்றும் நீங்கள் காலிமுகத்திடலில் நிற்கின்றீர்கள். எங்களுக்கு அதைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் நாம் எப்படி உங்களுடன் கை கோர்த்துக் கொள்வது?

தமிழர்களின் நீதி பூர்வமான வாழ்வியல் சுய இருப்பின் சமாந்தர சமத்துவ இருப்பை ஏற்றுணர்ந்து? இந்த தேசத்தில் உரிமையுள்ள நீண்ட வரலாற்று பாரம்பரியம் உள்ள இனக்குழுமமாக தமிழர்களை ஏற்று, சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத வரை இந்த தேசத்தை அறம் நின்று கொல்லும் என்பதை நீங்கள் இப்போதே உணர்வீர்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை. – என அந்த மடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு வெடிப்புகள்; மாறாத வடுக்களுடன் மூன்றாம் ஆண்டு நிறைவு

- பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன் -
(சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்)



இயற்கை அழகு மற்றும் செழிப்பான பன்முக கலாசாரம் என்பவற்றின் காரணமாக உலகம் முழுவதும் இருந்து வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்ந்த ஓர் அழகிய நாடு இலங்கையாகும். சிங்களவர், தமிழர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் ஏனைய இன மக்களையும், பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமிய சமயத்தை பின்பற்றும் மக்களையும் கொண்ட ஒற்றுமையும் சமாதானமும் நிறைந்த திருநாடாக விளங்குகின்றது. எமது நாட்டில் ஏப்ரல் மாதம் என்றாலே கொண்டாட்டமும், குதூகலமும் நிறைந்து காணப்படும். ஆனால் 2019 இல் இருந்து அனைவரையும் ஆழ்ந்த துயரத்திற்கு மத்தியில் கொண்டு சென்று அழகிய நாட்டை அலங்கோலமாக்கிய, சிதைத்துச் சின்னாபின்னமாக்கிய கோரச்சம்பவம் எமத. நாட்டில் ஏற்பட்டது. அதுவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலாகும். இதனாலேயே எமது நாட்டில் பண்டிகை மாதமான ஏப்ரல் பரிதாபமான மாதமாக மாறியது.

இலங்கை நாடடினுடைய வரலாற்றில் இரத்த வெள்ளம் ஆறாய்ப் பாய்ந்து ஓடிய மறக்க முடியாத நாளாக 21.04.2019 காணப்படுகின்றது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தினை பாவத்தில் இருந்து மீட்பதற்காக தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்து, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த நாளையே கிறிஸ்தவ மக்கள் ஈஸ்டர் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். இந்த பண்டிகை நாள் அன்றே தற்கொலைக் குண்டுத்தாரிகளாலும், ஒரு சில அடிப்படைவாத சிந்தனையுடையவர்களாலும் எமது நாட்டில் குண்டுவெடிப்புச் சமபவம் ஏற்பட்டது. இதனாலேயே இத் தாக்குதல் 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்' என அழைக்கப்படுகின்றது. உலகமே திரும்பிப் பார்க்க வைத்த கொடூர சம்பவமாக இத் தாக்குதல் அமைந்தது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் காலை 08:25 மணியளவில் நீர்கொழும்பு கடடுவாப்பிட்டி புனித செபஸ்தியன் ஆலயத்திலும், காலை 08:45 மணியளவில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும், காலை 09:05 மணியளவில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும், காலை 09:15 – 09:20 மணியளவில் சினமன் கிராண்ட் உணவகம், கிங்ஸ்பரி உணவகம், சங்கிரிலா உணவகம் போன்ற நட்சத்திர விடுதிகளிலும், பிற்பகல் 02:20 மணியளவில் தெஹிவளை விலங்கியல் பூங்காவிற்கு அருகிலும், பிற்பகல் 02:15 மணியளவில் தெமட்டகொட வீடொன்றிலுமாக மொத்தம் எட்டு இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட போது கிறிஸ்தவர்கள் உயிர்ப்பு ஞாயிறு வழிபாட்டு ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்தார்கள். அதேபோன்று உணவகங்களில் காலை உணவை அருந்துவதற்கு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மற்றும் உள்நாட்டினரும் கூடியிருந்த வேளை இந்த தாக்குதல் நடாத்தப்பட்டது. சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள், சமையல் நிபுணர், தொழிலதிபர், வெளிநாட்டு அரசியல்வாதிகள், கடசி உறுப்பினர்கள் போன்றோரின் உடல்கள் சிதைந்து சின்னாபின்னமாகிய கறைபடிந்த நாளாகும் இது.

இந்தத் தாக்குதல்களில் ஒன்பது தற்கொலைதாரிகள் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கையர்களாகவும், தேசிய தௌஜீத் ஜமாத் என்ற உள்ளூர் அடிப்படைவாத இஸ்லாமிய ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத இயக்கமான ISIS என்ற அமைப்பொன்றின் போதைனைகளில் ஈர்க்கப்பட்ட எம் நாட்டு இஸ்லாமிய இளைஞர்கள் பலர் தங்களுக்குள் ஒரு வலையமைப்பை ஏற்படுத்திக் கொண்டு மிகவும் கடட் மைக்கப்பட்ட ரீதியில் இவ் குண்டுவெடிப்புத் தாக்குதல் சம்பவங்களை முன்னெடுத்தனர். இதன் தலைவராக முஹம்மது ஹறான் செயற்பட்டார்.

இந்தத் தாக்கதலில் அனேக உயிர்கள் பலியாகின. இந்த தாக்குதலினால் 250 மேற்பட்டோர் உயிரிழந்தனர். 500 மேற்பட்டோர் காயமடைந்தனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நபர்களுள் சிலர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலினால் இலங்கையர் மட்டுமன்றி வெளிநாடடிலிருந்து சுற்றுப்பணயம் மேற்கொணட் சுற்றுலாப்பயணிகளும் உயிரிழந்தனர். குறிப்பாக இந்தியா, சீனா, டென்மார்க், சவூதி அரேபியா, நெதர்லாந்து, ஆஸ்ரேலியா, ஐக்கிய இராச்சியம், துருக்கி, வங்காளதேசம், ஜப்பான், போத்துக்கல், ஐக்கிய அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் இருந்து வந்த 42 வெளிநாட்டுப் பிரஜைகள் உயிரிழந்தமையோடு, 37 பேர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு தாக்குதல் இலங்கையில் நடந்து முடிந்ததற்கு, இதற்கு முன்னர் ஆட்சியில் காணப்பட்ட அரசாங்கத்தின் அலட்சியப்போக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். தீவிரவாத இஸ்லாமிய அமைப்பான தேசிய தௌஜீத் ஜமாத் இலங்கையில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன எனத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு பத்து நாள்களுக்கு முன்னரே செய்தி வெளியாகி இருந்தது. அத்தோடு சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புகளை ஏற்படுத்தயபடி, இலங்கையிலும் பயங்கராவதக் குழுவொன்று உருவாகி வருவதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. ஆனால் இவ்வாறான தகவல்கள் வெளியாகி இருந்த போதிலும் முன்னைய அரசாங்கம் அதனை ஒரு பொருட்டாக எண்ணாமல் அலட்சியமாக விட்டுவிட்டதன் விளைவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலாக வெடித்தது. முன்னைய அரசாங்கம் தகவல்கள் வெளியாகி இருந்தும் அதற்கான தகுந்த நடவடிக்கையினை எடுத்திருந்தால் இவ்வாறானதொரு கோரச் சம்பவத்தை தடுத்திருக்கலாம்.

இந்தக் குண்டுத் தாக்குதலினால் எமது நாட்டினுடைய பல துறைகள் முடக்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லப்போனால் சுற்றுலாத்துறை அதிகம் பாதிப்படைந்தது எனலாம். எமது நாடடிற்கு சுற்றுலாத்துறை மூலமே அன்னியசெலாவணி கிடைக்கின்றது. வெளிநாட்டுப்பயணிகள் தங்கள்விடுமுறையினைக்கழிப்பதற்காக எமது நாட்டிற்கு வருகைதந்த வண்ணம் காணப்பட்டனர். ஆனால் இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தினால் சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்பட்டது. சராசரியாக நாளாந்தம் 1, 700 சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர். ஆனால் குண்டு வெடிப்புச் சம்பவவத்திற்கு முன்னர் 4, 600 பேர் வருகை தந்தனர். காரணம் இந்த குண்டுத் தாக்கதலைத் தொடர்ந்து 37 நாடுகள் இலங்கைப் பயணத்துக்கு எச்சரிக்கையினை விடுத்திருந்தன. 2018ஆம் ஆண்டு 2.3 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். ஆனால் 2019 ஆண்டு குண்டு வெடிப்பினால் 30 சதவீத வீழ்ச்சியை எமது நாடு சந்திக்க நேரிட்டது, இன்று எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கும் இக் காரணம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இச் சம்பவம் எமது நாட்டிற்கு கிடைத்த மாபெரும் இழப்பு என்று கூறலாம். இச் சம்பவத்தினால் இலங்கை நாடடின் மீது சர்வதேச நாடுகள் மத்தியில் நம்பிக்கையிழந்த தன்மை காணப்பட்டது. எமது நாட்டிலிருந்த வெளிநாட்டினர் எவ்வித அறிவிப்புமின்றி வெளியேறிச் சென்றனர். இதனால் இலங்கை நாடு அபாய நிலைக்குள்ளான நாடு என்ற அடையாளத்தை சர்வதேச மட்டத்தில் பெற்றிருந்தது கவலை தருகின்ற விடயமாகும்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் குடும்ப உறவினர்கள் மற்றும் ஏனைய உறவினர்களையும் இழந்து தவிப்போரின் உள்ளக்காயங்களை யாராலும் மாற்ற இயலாதவை. அவர்கள் தங்களது துயரத்தைச் சுமந்தபடி நடைப்பிணமாகத் திரிகின்றனர். இந்தக் கொடூர சம்பவத்தைத் தொடர்ந்து வரலாற்றில் இல்லாத அளவிற்கு முஸ்லிம் மக்களுக்குப் பயந்து நடக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அவர்களைச் சந்தேக கண்ணோட்டத்திலே பலரும் பார்த்தனர். இந்தச் செயற்பாட. மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒரு சில முஸ்லிமக்ளின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் குற்றவாளிகளாகக் கருதுவது தவறான விடயமாகும்.

இன்றுடன் இந்தச் சம்பவம் நடைபெற்று மூன்றாண்டு பூர்த்தியாகின்றது.

மக்கள் மத்தியில் இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்களைப் பரப்பும் குழுக்கள் நாட்டில் இருக்கின்ற போதிலும், அதற்கு உள்ளாகாமல் இலங்கையராகிய நாம் ஒவ்வொருவரும் எங்கள் எங்களது மத மற்றும் கலாசார சம்பிரதாயங்களை முறையாகப் பின்பற்றுவதில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் எம்மவர் கற்றுக்கொணட் பாடங்கள் அனேகமாயிருந்தாலும், குறிப்பிட்டதொரு இனத்தினை புறக்கணிப்பது என்பது ஆரோக்கியமான விடயமன்று என்பதுதான் அதில் முக்கியமானது . நெருக்கடியான சூலில் அறிவார்ந்த ரீதியில் செயற்பட வேண்டும். எம் அழகிய திருநாடடில் 2019 இல் நடைபெற்றது போன்ற கொடூர சம்பவம் இனிவரும் காலங்களில் ஏற்படாத வண்ணம் சிந்தித்துச் செயற்படுவது எம் அனைவரினதும் மிக முக்கிய கடமையாகும். இன்று எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பாரிய பொருளாதாரத வீழ்ச்சிக்கு இக்காரணம் முக்கியமாக அமைந்தாலும், அதிலிருந்து மீண்டு கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொண்டு இலங்கை வாழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தும் வகையில் ஒற்றுமையாகவும், சகோதர உணர்வோடும் வாழவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாய. அமைகிறது.

# ரம்புக்கனை சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரை சந்தித்த அமெ. தூதர்!



நிராயுதபாணிகளான ஆர்ப்பாட்டாக்காரர்கள் மீதான வன்முறை தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ரம்புக்கனை பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டமை மற்றும் இதன் போது ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சர்வதேச நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதற்கமைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், 'எந்தவொரு தரப்பினர் மீதான வன்முறையையும் தாம் எதிர்ப்பதாகவும், ரம்புக்கனை சம்பவம் தொடர்பான முழுமையான, வெளிப்படையான விசாரணை அவசியம் என்பதோடு, அமைதியான போராட்டத்துக்கான மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்று அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரையும் சந்தித்து இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் டுவிட்டர் பதிவில் –

'ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையினால் இழைக்கப்பட்ட அநீதி மற்றும் ரம்புக்கனை வன்முறை தொடர்பில் முழுமையான, வெளிப்படையான விசாரணையின் தொடர்பில் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டது.

அமைதியான போராட்டக்காரர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் பணியைத் தவிர வேறு எந்தவொரு விடயமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முக்கியமானதாக இருந்ததில்லை. – என்று குறிப்பிட்டுள்ளார்.

## மாத்தறை போராட்டத்தின் போது கைதானவர்களுக்கு மறியல் நீடிப்பு

மாத்தறையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கைதுசெய்யப்பட்டவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு முன்னடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 8 பேரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாத்தறை நகரில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸாரால் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இதன்போது 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை நேற்று மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ராஜபக்ஷ அரசுக்கு எதிராக திருமலையில் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் ஒன்று கூடிய மீனவர்கள் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றம் காரணமாகத் தாம் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்த மீனவர்கள் இந்த அரசு பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன் பிடிக்க செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடாக உள்ளதாக தெரிவித்த அதே வேளை பிடித்துவரும் மீன்களை சந்தைப்படுத்துவதிலும் சிக்கல் நிலை நிலவி வருவதன் காரணமாக தாம் தமது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## அமைச்சர் நஸீர் அஹமட்டிற்கு எதிராக ஏறாவூரில் ஆர்ப்பாட்டம்!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட் அமைச்சுப் பொறுப்பைப் பெற்றுள்ளதற்கு அவரது சொந்த ஊரிலே மக்கள் எதிப்பில் செவ்வாய்க்கிழமை இரவு ஈடுபட்டனர்.

அமைச்சரின் உருவப்படம் தாங்கிய பதாகைக்கு நாணையத்தாள்களின் மாலை இடப்பட்டு, பின்னர் பெட்டி ஒன்றின்மீது வைத்து வீதியில் வலம்வந்து நஸீர் அஹமட் ஒழிக எனக் கோஷமிட்டு, பின்னர் அதனை எரித்துள்ளனர்.

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய அரசில் அமைச்சுப் பொறுப்பை ஹாபீஸ் நஸீர் அஹமட் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடாது என இதன்போது மக்கள் தெரிவித்துள்ளனர்.

## தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் இராகலையில் தீ!

நுவரெலியா – இராகலை பகுதியிலுள்ள தேயிலை தொழிற்சாலை ஒன்றில் தீவிபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயை அணைக்க பொது மக்கள் முயற்சித்து வருகின்றனர்.

தீயணைப்பு சேவைக்கு அறிவித்தும் ஒரு மணித்தியாலங்களை கடந்துள்ள நிலையிலும் சம்பவ இடத்திற்கு தீயணைப்புப் படையினர் வரவில்லை என பொதுமக்கள் தெரிவித்தனர்.

தீ விபத்தில் ஏற்பட்ட சேதம் தொடர்பான விவரம் வெளியாகவில்லை.

## நாணய நிதியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவரும் வன்முறையை நாடுபவர்களாக எங்களுக்குத் தெரியவில்லை. மாறாக பொலிஸார்தான் அளவுக்கு அதிக பலத்தைப் பிரயோகித்து அதனை செய்கின்றனர். ரம்புக்கன சம்பவத்தில் உயிரிழந்த பொதுமகனுக்கு நாங்கள் எமது அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்.

இந்த மக்கள் ஏன் போராடுகிறார்கள்? அவர்களின் அரசும் ஜனாதிபதியும் தோல்வி கண்டு விட்டார்கள் என்பதற்காகப் போராடுகிறார்கள். அதை அவர்கள் வெளிப்படுத்தும் போது சில விடயங்களை விடேமாகக் குறிப்பிடுகிறார்கள. ஜனாதிபதியை வீட்டுக்குப் போங்கள் என்று குறிப்பிடும் போது, சூறையாடிய எங்கள் பணத்தைத் திரும்பக் கொடுத்து விட்டுப் போங்கள் என்று விசேடமாக அவர்கள் குறிப்பிடுகின்றமை கவனிக்கப்பட வேண்டும். அப்படி அவர்கள் குறிப்பிடுவதற்கு நியாயமான – சரியான – காரணங்கள் உண்டு.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி நிலைமையை – நெருக்கடியை – சமாளிக்கும் எத்தனம் ஆரம்ப நிலையில்தான் இப்போது இருக்கின்றது என்று நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அது மாத்திரமல்ல, இலங்கைத் தீவுடனான எந்தடீலும் அவர்கள் தங்களுடைய கடன் மீள்செலுத்துகையைப் பேண்தகு நிலையில் கொண்டு செல்கின்றமையை உறுதிப்படுத்து வதாக இருக்க வேண்டும் என்று நாணய நிதியத்தினால் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது முக்கியமான விடயம்.

சர்வதேச நாணய நிதியம் உங்களுக்கு உதவுவது என்றால் இங்கு அரசியல் ஸ்திரத்தன்மை மாத்திரமல்ல, கடன் மீள்செலுத்துகை பேண்தகு நிலையில் இருப்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நாட்டைச் சூறையாடியவர்களிடமிருந்து பணத்தை மீளப்பெற வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். அவர்களை ஆட்சியிலிருந்து – அதிகாரத்தில் இருந்து – வெளியேறும்படி மக்கள் ஒன்றுகூடிப் போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் போகின்றவர்களாக இல்லை. அதிகாரத்தில் இருப்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

இத்தகைய சூழலில் சர்வதேச நாணய நிதியம் விரைந்து உதவுவதற்கான ஒரு திட்டம் ஒன்றை முன்வைத்து செயற்பட இங்கு வந்தாலும், அந்த உதவிகள் கூட சூறையாடப்படும் ஆபத்து உண்டு. ஆகவே சர்வதேச நாணய நிதியம் எத்தகைய உதவிகளை வழங்கினாலும் அவை ராஜபக்ஷகளினால் சூறையாடப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துபவையாக இருக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக விதிக்குமாறு நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

வறிய மக்களுக்கான உதவித் திட்டங்கள் கூட அதிகாரத்தில் உள்ளோரால் சூறையாடப்படக் கூடியதான முறைமைகள்தான் இங்கே உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் அவசர உதவி திட்டங்கள் நாட்டுக்கு கட்டாயம் வரவேண்டும். அவை அவசியம். ஆனால் அவற்றின் பயன் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு – அவசர, அவசிய உதவிகளாக, மருந்துகள் போன்ற நிவாரணங்களாக நேரடியாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ராஜபக்ஷகளினால் சூறையாடப்பட முடியாத விதத்தில் நேரடியாக மக்களுக்கு அவை கிடைப்பதை உறுதிப்படுத்தி வழங்குவதை நிபந்தனையாக விதிக்கும்படி சர்வதேச நாணய நிதியத்தை நாங்கள் கோருகிறோம்.– என்றார்.

## ஜனாதிபதி ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பிரேரணை நேற்று சமர்ப்பிக்கப்படுவதாக இருந்தது. எனினும் சுப நேரம் கருதி அது இன்று காலைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரசுப் பக்கம் அல்லாத ஒரு தரப்பின் பிரேரணை என்பதால் இந்த அரசமைப்பு திருத்தம் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தனிநபர் பிரேரணையாக இதனைச் சமர்ப்பிப்பார்.

இந்தப் பிரேரணையின் படி –

'மக்களின் நிறைவேற்றதிகாரம் ஜனாதிபதியினால் கையாளப்படும்' என்ற அரசமைப்பின் பிரதான வாசகம் 'அமைச்சரவையினால் கையாளப்படும்' என மாற்றப்படும்.

ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்வதற்குப் பதிலாக நாடாளுமன்றம் இனித் தெரிவு செய்யும். ஜனாதிபதியின் தகுதி நிலை சம்பிரதாயபூர்வ பதவியாக அமையும்.

இதுவரை ஜனாதிபதியிடம் இருந்த பல்வேறு அதிகாரங்கள், இனி, நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக் கடப்பாடுடைய பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படும்.

தற்போதைய அரசமைப்பின்படி, ஜனாதிபதியிடம் இருக்கும் பல்வேறு அதிகாரங்கள் நீக்கப்படுகின்றமை இந்தப் பிரேரணையில் விவரிக்கப்பட்டிருப்பதால் அந்த விவரங்களை உள்ளடக்கி, சுமார் 50 பக்கம் வரை அது கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மூன்று மொழிகளிலும் அந்த பிரேரணையின் பிரதி இன்று சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமையான நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் இத்தகைய தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றம் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பது என்றால் ஆறு மாதங்கள் வரை காலம் இழுபடலாம்.

ஆனால் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை ஒரு தீர்மானம் மூலம் நாடாளுமன்ற இடைநிறுத்தி, இத்தகைய பிரேரணையை விசேடமாக கையாண்டால் ஆறு வார காலத்தில் இந்த விடயத்தை நகர்த்தி முடிக்க முடியும்.

எனினும் அதற்கு – நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை ஒரு தீர்மானம் மூலம் நாடாளுமன்ற இடைநிறுத்துவதற்கு – இந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்கும் எதிரணிக்கு நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மை வேண்டும்.

அது மாத்திரமல்லாமல், இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு சட்டமாக வேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அனுமதியும் அவசியம் ஆகும். சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்கள் அனுமதி பெறுவதற்கு மேலும் கால அவகாசம் மேலதிகமாக தேவைப்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21 .04.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டா - மஹிந்த அரசுக்கு எதிராக நாடெங்கும் நேற்றும் போராட்டங்கள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டின் பல பாகங்களில் நேற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.



இதன்போது ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. அரச பயங்கரவாதம் மூலம் போராட்டத்தை ஒடுக்க முடியாது என மக்கள் கோஷங்களை எழுப்பினர்.

## ரம்புக்கனை அராஜகத்துக்கும் கண்டனம் தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் 12ஆவது நாளாகவும் நேற்று போராட்டம் தொடர்கின்றது.

இதற்கு ஆதரவு தெரிவித்து நாட்டில் பல பகுதிகளில் நேற்று போராட்டங்கள் இடம்பெற்ற நிலையில், 300 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஹர்தாலுக்கும் அழைப்பு விடுத்திருந்தன. இதனை ஏற்று பல பகுதிகளில் கடைகள் மூடப்பட்டன. இதனால் இயல்பு நிலை ஸ்தம்பிக்கப்பட்டது.

மலையகத்தில் பல பகுதிகளில் வீதி மறியல் போராட்டங்கள் இடம்பெற்றதால் பெரும் பதற்ற நிலையும் ஏற்பட்டது. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு, பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

# நாட்டை ஆள முடியாவிட்டால் எங்களிடம் ஒப்படையுங்கள்!

## ரம்புக்கனை சம்பவத்துக்கு சபையில் சஜித் கண்டனம்



**மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தி, நாட்டை ஆள முடியாவிட்டால், மாற்றுத் தரப்பினரிடம் ஆட்சியை கையளிப்பதே மேலான செயல்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**ரம்புக்கனை போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டித்து நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரம்புக்கனைத் தாக்குதலின் உண்மைகளை மூடிமறைக்க வேண்டாம். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை உடனடியாக நாடாளுமன்றத்துக்கு அழைக்க வேண்டும். அவர்கள் உண்மைச் சம்பவங்களை வெளியில் சொல்ல வேண்டும்.

அரசின் - அரச பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குப் பாதுகாப்புத் தரப்பினர் துணைபோகக்கூடாது. நாட்டையும், மக்களையும் காக்க வேண்டிய பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கு இருக்கின்றது - என்றார்.

# இலங்கைக்கு நெருக்கடி வேளை உதவும் இந்தியாவை மெச்சுகிறது நாணய நிதியம்

இலங்கை தற்போதைய தனது மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்கு நேரம் அறிந்து இந்தியா அந்த நாட்டுக்கு வழங்கி வரும் உதவிகளை மெச்சி சிலாகித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, இலங்கையுடன் தமது சர்வதேச நாணய நிதியம் செயலூக்கமான வகையில் ஈடுபட்டு, ஊடாடிச் செயற்படும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு உறுதியளித்தார்.

சர்வதேச நாணய நிதியம் - உலக வங்கி ஆகிய தரப்புகளுடன் வொஷிங்டன் டிசியில் தற்போது நடைபெறும் இளவேனில் காலக் கூட்டத் தொடரை ஒட்டி, இந்திய நிதியமைச்சர் தலைமையிலான குழு கடந்த திங்கட்கிழமையன்று கலந்துரையாடிய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டிருக்கும் இலங்கை, அப்பிரச்சினையை அதன் அரசு கையாண்ட விதத்தை ஒட்டி பல எதிர்ப்புப் போராட்டங்களையும் எதிர்கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொய்யுரைக்கின்றீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபாநாயகர் பொய்யுரைக்கின்றார் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

நேற்றுக் காலை கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜனாதிபதி கூறிய விடயம் என்று தெரிவித்து ஒரு தகவலை சபாநாயகர் வெளியிட்டார் என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பிரஸ்தாபித்தார்.

அனைத்துக் கட்சி தலைவர்களும் ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதி தாம் பதவி விலகத் தயார் எனத் தெரிவித்தார் என்ற தகவலையே சபாநாயகர் வெளியிட்டார் என்றார் சஜித் பிரேமதாஸ.

ஆனால், தான் கூறினார் என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்த அத்தகவலை சபாநாயகர் அடியோடு நிராகரித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பது போல கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தான் அவ்வாறு தெரிவிக்கவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தன நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

எதிர்க்கட்சிகள் 113 பெரும்பான்மையை நிரூபித்தால் ஜனாதிபதி பதவி விலகத் தயார் என மாத்திரமே தான் குறிப்பிட்டார் என்று சபாநாயகர் சொன்னார்.

தான் தெரிவித்தவற்றை சஜித் பிரேமதாஸா தவறாகப் புரிந்துகொண்டுள்ளார் என சபாநாயகர் நாடாளுமன்றத்தில் மேலும் கூறினார்.

எனினும் தனது கருத்தில் உறுதியாக நின்ற எதிர்கட்சி தலைவர் சபாநாயகர் அவ்வாறு தெரிவித்தார் என குறிப்பிட்டுள்ளமையுடன் சபாநாயகரைப் 'பச்சைப் பொய்யன்' எனவும் சாடினார்.

'கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் இருந்தார். அப்படியானால் அவர் நிலைமையைத் தெளிவுபடுத்தட்டும். நான் கூறுவது பொய் என்றால் அவர் மறுக்கட்டும்' – என்றார் சஜித்.

ஆனால் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எதுவும் கூறாமல் பம்மிக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் நீரே பொய் சொல்கின்றீர் என எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்துக் குறிப்பிட்டார்.

# எதிரணிக்கு மீண்ட மூவர்

முன்னதாக அரசாங்கத்திற்கு ஆதரவினை வழங்கியிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இனி அரசாங்கத்தை ஆதரிக்க போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், இாக் ரகுமான் மற்றும் எம்.எஸ் தௌஃபீக் ஆகியோர் இனி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில்லை என தீர்மானித்துள்ளனர்.

## நாடு ராஜபக்ஷ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அ என நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் நெருக்கடி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற நிதி தொடர்பான தெரிவுக் குழுவிற்கு மத்திய வங்கி மற்றும் நிதிச் சபை ஆகியவற்றை அழைத்திருந்த போது, ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியடைந்தது எவ்வாறு எனக் கேள்வி எழுப்பியிருந்தோம். நிதிச் சபையின் உறுப்பினர் ஒருவரின் முடிவே இதற்குக் காரணம் என்பது தெளிவாகியது. ஆனால், இதனை நிதி அமைச்சரோ அல்லது அமைச்சரவையோ தெரிந்திருக்கவில்லை.

தனி ஒருவரின் தன்னிச்சையான முடிவுகளினாலேயே இன்று பொருள்களுக்கு விலை நிர்ணயிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். மேலும், பொருத்தமற்ற நபர்களை உயரிய பதவிகளுக்கு நியமித்தமையே தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் எங்களுடைய அனுமதிக்கு அமையவே குமாரசுவாமி ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டார். என்னுடைய வீட்டில் என்னுடைய மகளின் டைப்ரைட்டரிலேயே அவருக்கான நியமன கடிதம் தயாரிக்கப்பட்டது. இவ்வாறே நாட்டின் பொருளாதாரத்தில் நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஆனால், இன்று தன்னிச்சையான முடிவுகளை எடுக்கக்கூடிய ஒருவரை நியமித்து, இந்த அரசாங்கம் சீர்குலைந்துள்ளது. இனியும் அரசாங்கம் ஆட்சியில் இருக்க வேண்டாம். முழு அரசாங்கமும் ஆட்சியிலிருந்து வெளியேறுங்கள். மக்கள் அச்சமடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வீதியில் இறங்கி போராடுகின்றனர். இனியும் எதற்காக பேசிக்கொண்டிருக்க வேண்டும்.?

ஆளுந்தரப்பை விட எதிர்க்கட்சியில் சிறந்தவர்கள் இருக்கின்றனர். எனவே, அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்குங்கள். பொய்யான விடயங்களைக் கூறிக்கொண்டிருப்பவர்களுடன் இனியும் இணைந்திருக்க முடியாது. நாட்டை மேலும் சீர்குலைக்க வேண்டாம். புதிய அமைச்சரவையை நியமிப்பதை விட, இடைக்கால அமைச்சரவை ஒன்றை நியமித்து, அரசமைப்புத் திருத்தத்தை முன்னெடுத்தாலே நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியும்.

இது பிரதமர், ஜனாதிபதி அல்லது ராஜபக்ஷக்களின் நாடல்ல. எனவே, குடும்பம் ஒன்றிடம் ஆட்சி அதிகாரத்தை கொடுத்தவிட்டு, அமைதியாக தூங்கிக் கொண்டிருக்க முடியாது. நெருக்கடிக்கு யாரும் பொறுப்பேற்காதிருப்பது குறித்து எங்களுக்கு கடும் அதிருப்தி இருக்கின்றன. பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயற்படுங்கள். ஆட்சியை விட்டு வெளியேறி, அதிகாரத்தை நாடாளுமன்ற குழுவிடம் ஒப்படையுங்கள். உண்மையை மூடி மறைக்க முடியாது. வெளியில் வந்து உண்மையை கூறுங்கள் – என்றார்.